HNB GRAMEEN

# மெஹெவர

இருள் நீக்கும் உன்னத பணி

2016 ஜனவரி - பெப்ரவரி இதழ்




## வெற்றியுடன் நிறைவுபெற்ற கடந்தாண்டின் ஊடாக சுபீட்சமான எதிர்காலத்தை நோக்கி ...

ஆரம்பமும் முடிவும், இணைவதும் பிரிவதுமாக காலம் மிக வேகமாக உருண்டோடிக் கொண்டிருக்கிறது. நாளாந்தம், வாராந்தம், மாதாந்தம் என நாம் அறிந்து வைத்துள்ள காலப்பகுதிகளில் அவற்றை நாம் பிரித்து ஒரு வருடத்தை கழித்தோம் என்பதை நினத்து பார்க்கும் போது அதற்கு சிறப்பான இடம் இருக்கிறதென்பது மறுக்க முடியாது. 2015ஆண்டு நிறைவு பெற்று 2016ஆம் ஆண்டில் கால்பதித்துள்ள நாம் கடந்தாண்டு தொடர்பில் எமது கவனத்தை திருப்பவேண்டிய காலம் என்றால் அது விவாதத்துக்குரிய விடயமல்ல என்றே கூற வேண்டும்.

கிராமின் நிறுவனம் இலங்கை வங்கித்துறையில் கீர்த்தி நாமத்தை பெற்ற ஹட்டன் நஷனல் வங்கி மற்றும் அதன் இணை நிறுவனமாக இணைந்து கொண்டு 2015ஆம் ஆண்டை ஆடம்பரமாக ஆரம்பித்ததுடன் அந்த ஆனந்தம் இன்னும் இரண்டு மூன்று மடங்காக அதிகரிக்க உலக ஆலோசனை மற்றும் ஆய்வு நிறுவனத்தினால் World Consulting And Research Corporation (WCRC) 2014ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12 திகதி நடைபெற்ற விருது வழங்கும் நிகழ்வில் “Asias most promising Brand 2014” ஆசியாவின் மிகவும் நம்பிக்கைக்குரிய நாமமாக கிராமின் நிறுவனம் தெரிவு செய்யப்பட்டது. இந்த விருது எமது நிறுவனத்துக்கு விசேடத்துவம் மிக்கதாக அமைவதற்கான காரணம் இலங்கையின் நுண்நிதித் துறையில் முதல் தடவையாக இந்த விருதினைப் பெற்றுக் கொண்ட நிறுவனம் என்பதனால் ஆகும்.

தொடர் 3

## வாழ்க்கையின் அர்த்தம்

# பாசம். . . மகான்களை உருவாக்கும்

சிறிய தாயைப் (சித்தி) பற்றி அனைவரும் நல்லவிதமாக பேசுவதைக் காண்பது அரிதிலும் அரிது. இலங்கையில் மாத்திரமல்லாது உலகலவிலும் பெரும்பான்மையான சிறிய தாய்மார்கள் முதல் மனைவியின் பிள்ளைகளை பாராமுகமாகவே கவனிப்பதுண்டு. இன்றும் நாளையும் எப்போதும் இந்த உணர்வு மனிதனின் உள்ளத்தில் என்றுமே நிலைபெற்றிருக்கும். உலகத்தில் இடம்பெற்ற ஒரு சம்பவத்தை அடிப்படையாக வைத்து இது உண்மையா என்பதை ஆராய்ந்து பார்ப்போம்.


அமெரிக்காவின் வேர்ஜீனியா நகரில் 1883ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 26ஆத் திகதி ஒலிவர் என்ற குழந்தை இவ்வுலகில் பிறந்தது. ஒலிவருக்கு 10 வயது இருக்கும் போது அவருடைய தாய் இறந்துவிட்டார். ஒலிவர் தனது தாயிடம் அளவில்லா அன்புக்குரிய சுட்டிப் பையனாக இருந்தான். இந்தச் சுட்டிப் பையனின் குறும்புகள் நாளாந்தம் அதிகரித்து வந்ததால் தாய் பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுக்க ஆரம்பித்தார். மிருகங்கள், பறவைகளுக்கு கல்லெறிதல் உட்பட அதற்கு வேதனை செய்தல் என்பன அவனிடம் இயல்பாக காணப்பட்டதுடன் இவை நாளாந்தம் அதிகரிக்கத் தொடங்கியது. யாரும் எதிர்பாராத ஒரு குழந்தையாக வளர ஆரம்பித்தான். இந்த சந்தர்ப்பத்தில் தனது தாயை இழந்து வாழும் சூழ்நிலை உருவானது. அதன் பின்னர் தந்தையின் பாதுகாப்பில் ஒலிவர் மற்றும் அவருடைய சகோதரன் சில காலம் வாழ்ந்து வந்தனர். தனது பிள்ளையை பாராமரிப்பதில் பாரிய சிரமங்களை எதிர்நோக்கியதால் ஒரு தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டிய நிலை தந்தைக்கு ஏற்பட்டது. இதற்காக இரண்டாவது திருமணத்தை செய்தார். அவளின் பெயர் மாத்ரா. அவள் சிறுவன் ஒலிவரினதும், சிறிய சகோதரனினதும் சிறிய தாயாகும். ஒலிவரின் தந்தை தனது இரண்டாவது மனைவியிடம் ஒலிவரை பற்றி இவ்விதம் அறிமுகம் செய்து வைத்தார்.

"எனது மூத்த மகன் உன்னையும் கல்லால் அடித்தால் அதற்காக நான் வியப்படைய மாட்டேன். அந்தளவு மோசமான பிள்ளை" எந்த விடயத்தை சொன்னாலும் அதனை கேட்காமல் குறும்பு செய்யும் சிறுவன் என்று தந்தை ஒலிவரைப் பற்றி குறையாக தனது மனைவியான மாத்ராவிடம் கூறினார். அதற்கு அவள் ஒலிவரை அழைத்து அவனது தலையைத் தடவி, "எனது மகன் மிகவும் நல்லவன்" என்று அன்பாக கூறினாள். அந்த அன்பான வார்த்தைகள் ஒலிவரின் உள்ளத்துக்கு சந்தோஷத்தை ஏற்படுத்தியது. தனது தாயின் அன்பான அரவணைப்புக்கு பின்னர் சிறிய தாயிடம் இருந்து முதல் தடவையாக ஒலிவர் இவ்வாறான வார்த்தைகளை கேட்டார். சிறிய தாய் சிறந்த கல்விமானாகும். இதனால், சிறுவர்கள் குறும்புக்காரர்கள் என்பதை நன்கு அறிந்து வைத்திருந்தார். அவ்வாறே படிப்படியாக சிறுவனின்




குறும்புகளை வேறு பக்கமாக திசைத்திருப்ப அவர் முயற்சி செய்தார். இந்த செயற்பாடு ஒலிவரை வேறு பாதையில் பயணிக்க அடித்தளமாகியது. ஒலிவர் கல்வியில் ஆர்வமாக செயற்பட ஆரம்பித்தான். நன்றாக படித்தால் பரிசு வாங்கித் தருவேன் என்று உற்சாகமூட்டினார். அந்தப் பரிசு தட்டச்சு இயந்திரம் என்றும் அதனூடாக சிறந்த தட்டச்சு எழுத்தாளராக உருவாக முடியுமென்றும் அவள் கூறினாள். கல்வியின் ஊடாக ஒலிவர் செல்வந்தராகவும், உலகப் புகழ் பெற்ற மனிதராகவும் மாற முடியுமென்றும் அதற்கு சிறிய தாயான தன்னால் சகல உதவிகளையும் வழங்க முடியுமென்றும் கூறினாள். உனக்குப் பிடித்தது எதுவென்று ஒலிவரிடம் கேட்ட போது அதற்கு ஒலிவரிடம் இருந்து சாதகமான பதிலொன்று கிடைத்தது.

சிறிய தாயின் வழிகாட்டலில் ஒலிவர் தட்டச்சு இயந்திரத்தை கற்றுக் கொண்டான். தனது 15ஆவது வயதில் சுதந்திர பத்திரிகை எழுத்தாளராக ஒரு நிறுவனத்தில் இணைந்து கொண்டார். அதன் பின்னர் பிரசித்திபெற்ற சஞ்சிகையொன்றில் இணைந்தார். அதில் எவ்விதம் செல்வந்தராவது என்பது தொடர்பில் எழுதினார். இதனால், ஒலிவரின் வாழ்வில் அடுத்த இலக்கை அடைவதற்கான வழி ஏற்பட்டது. அமெரிக்காவின் கோடீஸ்வரரும், உலகப் புகழ் பெற்ற தொழிலதிபருமான என்றிவ் காணகியை நேர்காணல் செய்வதற்கான வாய்ப்பு கிடைத்தது. ஒலிவரின் திறமையைக் கண்ட என்றிவ் அவருக்கு பொறுப்பொன்றை சுமத்தினார். அதாவது அடுத்த 20 வருடத்தில் உலகத்தில் வெற்றிபெற்ற மனிதராக திகழ்வதற்கு மேற்கொள்ள வேண்டிய வேலைத்திட்டங்கள் என்ன என்பது தொடர்பாக எழுதுமாறு கூறினார். ஒலிவர் அதனை தனது மனதில் சவாலாக ஏற்றுக் கொண்டு உலகில் செல்வந்தர்களாக இருக்கும் மனிதர்களையும், உலகப் பிரசித்திபெற்ற நபர்களையும் அடையாளம் கண்டு அவர்களை நேர்காணல் செய்து உலகில் வெற்றிபெறுவது எவ்வாறு என்பதற்கான சில விடயங்களை தனது ஆக்கங்கள் மூலம் பகிரங்கப்படுத்தினார். தோமஸ் அல்வா எடிசன், தியடோர் ரோஸ்வெல், ஜோன் ரெக்ஷேலர், ஹென்றி போட், அலெக்ஷான்டர் கிரகம்பெல் போன்றவர்களிடம் நேர்காணல் செய்தார். இதன் பின்னர் உலகப்பிரசித்தி பெற்ற எழுத்தாளராகவும், அரசியல்வாதியாகவும் திகழ்ந்தார். உலகில் அதிகளவில் விற்பனையாகும் புத்தகங்களை எழுதியுள்ளார். அவருடைய முழுப்பெயர் ஒலிவர் நெப்போலியன் ஹில். உலகப் புகழ் பெற்ற இந்த எழுத்தாளர், அரசியல்வாதி மற்றும் வியாபாரியான இவர் எமக்கு நல்லதோர் முன்மாதிரி என்றால் பிழையாகாது.




பிரமேசிறி கமகே
தலைவர், கைத்தொழில் அபிவிருத்தி மத்திய நிலையம்

தேடிப்படிக்கும் ஆர்வத்தை சிறைவைக்ககூடாது. மீண்டும் மீண்டும் முயற்சி செய்ய வேண்டும்.

1ஆம் பக்க தொடர்





# 2015 ல் இருந்து

நிறுவனத்தின் ஒருவருட பயணம் மற்றும் நிறுவனத்தின் எதிர்கால இலக்கு தொடர்பில் கலந்ரையாடும் HNB கிராமின் பைனான்ஸ் நிறுவனத்தின் வருடாந்த முன்னேற்ற மீளாய்வு கூட்டம் 2015 பெப்ரவரி 14ஆம் திகதி மகரகம இளைஞர் சேவைகள் மன்ற பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. பத்து வருட சேவையை அண்மித்திருக்கும் கிராமின் நிறுவன ஊழியர்கள் கௌரவப்படுத்தப்பட்டமை இவ்வாண்டு நடைபெற்ற மீளாய்வு கூட்டத்தில் இடம்பெற்ற விசேட நிகழ்வாக கருதப்படுவதுடன் கிராமின் நிறுவனம் HNB வங்கியின் இணை நிறுவனமாக செயற்பட ஆரம்பித்தது முதல் கிராமின் நிறுவனத்தின் புதிய தலைவர் ஜொனதன் அலஸ் அவர்கள் HNB கிராமின் நிறுவனத்தின் சகல உத்தியோகத்தர்கள் மத்தியில் முதல் தடவையாக உரையாற்றினார்.

இலங்கை படுகடன் பணியகத்தின் 25ஆவது நிறைவு விழாவில் தனது பணியகத்தில் பதிவு செய்த 91 வங்கி மற்றும் நுண்நிதி நிறுவனங்களில் 6 நிறுவனங்கள் சிறந்த நிறுவனமாக வரலாற்றில் முதல் தடவையாக கௌரவிக்கப்பட்டன. அந்த 6 நிறுவனங்களில் கிராமின் நிறுவனம் வாடிக்கையாளர்கள் ஒரு இலட்சம் முதல் மூன்று இலட்சங்களை கொண்ட நிறுவனப் பிரிவில் சகல வங்கி மற்றும் நுண்நிதி நிறுவனங்களை பின்தள்ளி முதலிடத்தைப் பெற்றுக் கொண்டமை விசேட அம்சமாகும்.

தனது வியாபார செயற்பாடுகளுக்கு அப்பால் சமூக சேவைகளுக்கும் முன்னுரிமை வழங்கும் HNB கிராமின் நிறுவனம் 2015ஆம் ஆண்டில் செய்த சமூக சேவைகளில் பிரதான இடத்தை வகிப்பது மிகவும் கஷ்டப் பாடசாலையாக அடையாளம் காணப்பட்ட உடுகாவர ஸ்ரீ மேதானந்த மகா வித்தியாலத்தின் பாரிய குறைபாடாக இருந்த பாடசாலை பெயர்ப்பலகை நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டமை இங்கு கூற முடியும்.

ஒவ்வொரு வருடமும் 2015ஆம் ஆண்டில் வெசாக் மற்றும் பொஷன் போயா தினத்தில் நடத்தப்படும் தன்சல HNB கிராமின் தலைமைக்காரியாலயம் உட்பட நாட்டின் நாலா பாகங்களிலும் பரந்து காணப்படும் கிளைக் காரியாலயங்களிலும் வழங்கப்பட்டமையை காணக்கூடியதாக இருந்தது.

இவ்வளவு காலமும் பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் என்ற பெயரில் இயங்கி வந்த நுண் நிதி நிறுவனமானது 2015ஆம் ஆண்டு 17ஆம் திகதியில் இருந்து HNB வங்கியுடன் இணைந்து கொண்டவுடன் HNB கிராமின் பைனான்ஸ் என்ற பெயரில் தனது பயணத்தை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டமை நுண் நிதி நிறுவனத்தில் வலுவான நுண் நிதி நிறுவனத்துக்கு சொந்தமான பண்புகளைக் கொண்ட நிறுவனமாக மாற்றம் பெற்றது.

HNB கிராமின் நிறுவனத்தால் நிறுவன ஊழியர்களுக்கு வருடாந்தம் வழங்கப்படும் இலவச வெளிநாட்டு சுற்றுப்பயணம் 2015ஆம் ஆண்டு ஜூலை மாதம் 30, 31 மற்றும் ஆகஸ்ட் 01ஆம் திகதி ஆகிய மூன்று நாட்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. HNB கிராமின் அலுவலக உத்தியோகத்தர்கள் 185 பேர் தாய்லாந்துக்கு மூன்று பயணமாக சென்றதுடன், இச்சுற்றுப் பயணத்தில் பல்வேறு அனுபவங்களையும் பெறக்கூடியதாக இருந்தது.

HNB கிராமின் பைனான்ஸ் நிறுவனத்தின் ஊழியர் நலன்புரி சங்கத்தினால் வருடாந்தம் நடத்தப்படும் HNB கிராமின் சவால்கிண்ண மாபெரும் கிரிக்கட் போட்டியின் இறுதிப் போட்டி செப்டெம்பர் மாதம் 7ஆம் திகதி புளும்பீல்ட் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. நிறுவன ஊழியர்கள் மற்றும் கிளை ஊழியர்களிடையே இணைப்பை ஏற்படுத்தும் நோக்கில் இப்போட்டிகள் நடத்தப்பட்டன. கடந்த 2014ஆம் ஆண்டு எச்.என்.பி.கிராமின் சவால்கிண்ணத்தை கைப்பற்றிய புத்தளம் கிளை இம்முறையும் சிறப்பாக விளையாடி கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டதுடன் 2015ஆம் ஆண்டில் HNB கிராமின் நிறுவனத்தில் போட்டியிட்ட பல அணிகளுடன் போட்டியிட்டு அதிக வெற்றிகளைப் பெற்ற அணியாகவும் புத்தளம் அணி விளங்கியமை விசேட அம்சமாகும். இதேவேளை இலங்கையின் நுண்நிதி சேவைகளை வழங்கி வரும் நிறுவன சங்கங்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட அங்கத்துவ உள்ளூர் நிதி நிறுவன நிறுவனங்களிடையே நடைபெற்ற கிரிக்கட் போட்டியில் HNB கிராமின் ஒன்றிணைந்த அணி கிண்ணத்தை பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

2015ஆம் ஆண்டில் HNB கிராமின் கிளை நிறுவனங்கள் பல புதிய முகவரியில் செயற்பட ஆரம்பித்ததுடன் கிராமின் கிளை




வலை பின்னலில் 14ஆவது கிளையான பதுளை கிளை 2015ஆம் ஆண்டில் புதிய முகவரியில் செயற்பட ஆரம்பித்த முதலாவது கிளை என்பது குறிப்பிடத்தக்கது. 2015 ஏப்ரல் மாதம் 10ம் திகதி வெள்ளிக்கிழமை இக்கிளை புதிய இடத்தில் செயற்பட ஆரம்பித்தது. இதன் பின்னர் 2015 மே மாதம் 15ஆம் திகதி மட்டக்களப்பு கிளையும் ஆகஸ்ட் 28ஆம் திகதி மன்னார் கிளையும் புதிய முகவரியில் செயற்பட ஆரம்பித்ததுடன் வாடிக்கையாளர்களுக்கு மேலும் சிறந்த சேவையை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் பல கிளைகள் இவ்விதம் புதிய இடத்தில் சேவைகளை ஆரம்பித்துள்ளன.

நாட்டில் நோயுடன் வாழும் நபர்களுக்கு முடிந்தளவு உதவிகளை செய்வதற்கு HNB கிராமின் என்றும் பின்நிற்பதில்லை. அந்த வகையில் கடந்த பல்லாண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட மெஹெவர உதவி நிதியத்தின் மூலம் 2015ஆம் ஆண்டு மாத்திரம் துன்பத்தில் இருந்த 78 நபர்களுக்கு 1,124,450 ரூபா தொகை அவர்களின் நிதி தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்வதற்காக வழங்கப்பட்டது.

2012ஆம் ஆண்டு முதல் இணையத்தள செய்திகளை சிங்கள மற்றும் தமிழ் மொழியில் வெளியிட்டு வந்த "மெஹெவர" இணைய செய்திச் சேவை 2015 நவம்பர் மாதத்தில் இருந்து அச்சு வடிவில் நிறுவன உத்தியோ கத்தர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டது. இதன் மூலம் நிறுவனத் திலுள்ள சகல ஊழியர்களுக்கும் அந்நியொன்யமாக தங்கள் கருத்துக்களையும் ஆக்கங்களையும் வெளியிட்டு நிறுவனத்துக்கும் ஊழியர்களுக்கும் இடையிலான பரஸ்பர நம்பிக்கையை கட்டியெழுப்பும் நோக்கில் இச்செய்தித்தாள் வெளியிடப்பட்டது. அவ்வாறே ஊழியர்களின் அறிவு மற்றும் செயற்திறனை அதிகரிப்பதற்கான சந்தர்ப்பமாகவும் இது அமைந்துள்ளது.

நாட்டின் உயிர்நாடிகளான சிறுவர் பரம்பரையை பாதுகாக்கும் நோக்கில் "பாதுகாப்புமிக்க சிறுவர் எதிர்காலம்" என்ற தொனிப்பொருளில் நாடளாவிய ரீதியில் ஒழுங்கு செய்யப்பட்ட விழிப்புணர்வு வேலைத்திட்டம் HNB கிராமின் நிறுவனத்தினால் இவ்வாண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டது. பாரிய சமூக வேலைத்திட்டமாக இது அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் முதல்கட்டமாக இலங்கை சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் ஆலோசனைக்கு அமைய "சிறுவர்களை வன்முறையில் பாதுகாப்பது" என்பது தொடர்பில் மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் துண்டுப் பிரசுரம் அச்சிடப்பட்டு நாடளாவிய ரீதியில் வழங்குவதற்கு HNB கிராமின் கிளை வலையமைப்புகள் ஊடாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் இது தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு நிக்கரெட்டி, சிலாபம், மொனராகலை, யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களில் மக்களின் பேராதரவுடன் நடைபெற்றது.

2015ஆண்டில் நிறுவன ஊழியர்களின் ஒன்றுகூடல் மிக விமர்சையாக நடைபெற்றதை எவரும் மறக்க முடியாது. நிறுவனத்தின் ஒவ்வொரு பிரிவிலும் மேடையேற்றப்பட்ட கலை நிகழ்வுகள் நெஞ்சைவிட்டு அகழாது என்பதுடன் ஒற்றுமையுடனும், சகோதர உணர்வுடனும் புத்தாண்டை எதிர்நோக்க இந்நிகழ்வை சந்தர்ப்பமாக மாற்றியமைக்க வேண்டுமென சகலரும் பிரார்த்தனை செய்தனர்.

நல்லதோர் எதிர்காலத்தை பெற்றுக் கொள்ள வளமான நிகழ்காலமும், கடந்தகால படிப்பினையும் இன்றியமையாத



# 2016 க்கு



ஒன்றாகும். எம்மை விட்டுச் சென்ற 2015ஆம் ஆண்டை சற்று பின்நோக்கிப் பார்த்தால் HNB கிராமின் பைனான்ஸ் நிறுவனத்தின் செயற்பாடுகள் எமது எதிர்காலத்துக்கு நல்லதொரு வெளிச்சத்தை காட்டுவதாக அமைந்துள்ளது எனலாம். கடந்த கால வரலாறுகள் சிறப்பாக இருக்கும் பட்சத்திலேயே எதிர்காலம் சிறப்பாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

# கவிதைச் சாளரம்

## உனக்காக


குறும்புக் காதல்
உண்மையாக உள்மனதில்
நெஞ்சில் ஊஞ்சலாடி
என்தை வறுக்கிறது...

திடீரென ஏற்பட்டு
என் உள்ளத்தில் குடியமர்ந்து
விரைவாக ஓடிட
உனக்கு இறக்கமில்லையா...

என் உள்ளத்தை
கொள்ளையடித்து
என்னையே மறக்கடித்து
எமது காதலுக்கு பெயர் சொல்ல
முடியாது என்பதை நீ அறிவாயா

என்றாகினும் என்னவராய்
என் கண்ணிரண்டில் வந்தமர
அன்று நான் ஏற்பேன்
எனக்கே உரியவன் என்று...

- சுசித் மங்களா அதிகாரி



## அன்பான உள்ளமே

கடந்த கால வரலாற்றை நினைக்கும் போது
கிடைக்கும் ஆனந்தம் கவியில் கூற முடியாது
காதலர்களைப் போன்று குடியிருக்கும் அன்பான
நெஞ்சங்களைப் கொண்ட

தற்செயலாய் கற்சிலையாய் எனையாக்கினாய் நீ
உச்சியிலே நீயிருந்து முடமாக்கினாய் நீ
வன்மையில் புன்னகையால் பொதி செய்கிறாய் நீ
காத்திருப்பேன் காதலியாய் விலை செய்வாயென

மாதா, குரு, தெய்வம் என்றிருக்கையில் நீ
உற்ற நண்பன்... தோழன் என கூறும் நீ
காலவோட்டத்தில் காதலர்களைப் போல நீ
பொறிக்கப்பட்ட கல்லாய் நானிருப்பேன் உனக்கு

டி.ஏ.சாலட் விஜேசிறி
ஹொரனை கிளை



## செல்ல மகனே.....

பல்லாண்டு காலம்
தவமிருந்து நீ கிடைத்தாய்
உனக்காக நான் பிறந்தேன்
மீண்டும் மீண்டும் வாழ்வதற்காக
உன் உருவை பார்க்க வேண்டும்
என் செல்ல மகனே...

இரவு கண்ணயர்ந்தாலும்
விழித்தாலும்
வேலையில் மூழ்கினாலும்
என்றும் உனை மறவேன்
என் செல்ல மகனே...

- இரும் ரண்தெனிய

## பதினைந்து வருடம்...!

ஏட்டுக்கல்வி மாற்றமடையும்
தடைகளுக்கு மத்தியில்
பதினைந்து வருடங்களுக்கு முன்
நம்பணி நற்பணி நாடறியும்...

வறுமையின் உச்சகட்டம்
செய்வதறியாது நாள்தோறும்
இருள் நீக்கும் உன்பணி
அணையாது நம்நாட்டில்
"கிராமின்" பெயரில் வந்துதித்து
தொடர்ந்து வீறு நடைபோட

- கமல் ரணவீர

## நீ

குளிர்ந்த உள்ளத்தை
களவாய் பறித்தெடுத்து ...!
இக்காரிருளில்
ஏன் என்னை தேடுகிறாய்...!

விரைவாக என்னை சிறைபிடித்து
உளம் மகிழ்வாய் கவிவடிவில் ...!
மீண்டும் என்வருகைக்காய் காத்திருப்பாய்
கடந்தகால நினைவுகளை மீட்டெடுக்க...!

- விக்ரம்

# HNB கிராமின் நாட்குறிப்பு

## HNB கிராமின் 128 பேருக்கு பதவி உயர்வு

ஒவ்வொரு வருடம் புதிய ஆண்டில் கால்பதிக்கும் போது காரியாலயத்தில் உள்ள சகலரும் தங்களும் இவ்வருடம் பதவி உயர்வு கிடைக்குமா என்ற சந்தேகத்தில் பதற்றத்துடன் இருப்பதை காணக்கூடியதாக இருக்கும். இந்த எதிர்பார்ப்பு கடந்த ஆண்டை விட இவ்வாண்டில் அனேக ஊழியர்களுக்கு இருந்ததுடன் இம்முறை 128பேருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டது. அவ்வாறே, இவ்வளவு காலமும் நடைமுறையில் இருந்த பிரதான பதவிகள் பல பெயர்மாற்றம் செய்யப்பட்டதுடன் 2016ஆம் ஆண்டில் இடம்பெற்ற பாரிய மாற்றம் எனலாம்.

இவ்விதம் பதவி உயர்வு பெற்றவர்களில் பிரியலால் அரங்கல அவர்கள் பிரதான செயற்பாட்டு உத்தியோகத்தராக (C.O.O) பதவி உயர்வு பெற்றதுடன் காமினி ஆரியசிங்க, ஜோசப் ஜோன், லக்ஷ்மன் எராஜ் ஆகியோர் சிரேஷ்ட பிரதேச முகாமையாளராக பதவி உயர்வு பெற்றுள்ளனர். சுனேந்ர மதுசங்க அவர்கள் சிரேஷ்ட முகாமையாளராகவும் நிதி மற்றும் இணைப்பு (பிரதேச) அதிகாரியாகவும் யொஹான் தனஞ்சய அவர்கள் சிரேஷ்ட முகாமையாளர் – மனித வளம், மகேந்திர ரகு, சமீர சம்பத், பாலசுப்ரமணியம் நிஷாந்தன், தனஞ்சய பண்டார ஆகியோரும் சிரேஷ்ட கிளை முகாமையாளராகவும் இந்த வருடம் பதவி உயர்வு வழங்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக புதிய பதவி உயர்வு மற்றும் பதவி மாற்றம் பெற்ற சகலருக்கும் புதிதாக பதவி உயர்பெற்ற சகலருக்கும் HNB கிராமின் கிராமின் தலைவர் மற்றும் முகாமைத்துவ பணிப்பாளர் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் உட்பட நிறுவனத்தின் சகல பணியாளர்களும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றனர்.

## 2015 புலமைப்பரிசில் மாணவர்களுக்கு "HNB கிராமின்" யாலுவினால் விருதுகள்



2015ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிய கிராமின் பிள்ளைகள் மற்றும் HNB கிராமின் சேமிப்பு கணக்கு உரிமையாளர்களின் பிள்ளைகள் 215 பேருக்கு HNB கிராமின் பைனான்ஸ் நிறுவனத்தினால் பணப்பரிசு மற்றும் பாடசாலை உபகரணங்கள் பகிர்ந்தளிக்கும் நிகழ்வு கடந்த டிசம்பர் மாதம் HNB கிராமின் நாடளாவிய கிளைகளில் பரவலாக இடம்பெற்றது.

மாணவர்கள் கல்வியில் ஆர்வத்துடன் ஈடுபடும் அதேவேளையில், சேமிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கும் யாலு சேமிப்பு கணக்கில் அதிக பணத்தை முதலீடு செய்த வவுனியா விபுலானந்த வித்தியாலய மாணவி ரி.திலுக்ஷிகாவுக்கு 25,000ரூபா பணமும் விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டமை விசேட அம்சமாகும்.

## வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு HNB கிராமினால் உதவி

HNB கிராமின் பதவிய கிளையைச் சேர்ந்த நெடுங்கேணி மத்திய நலையத்தின் ஊடாக செயற்படுத்தப்படும் கிளிநொச்சி பிரதேசத்தின் முருகண்டி, பாரதிபுரம், பொன்னநகர் போன்ற மத்திய நிலையங்களுக்கு அப்பால் இடம்பெற்ற பாரிய வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட 165 பேருக்கு உலர் உணவுகள் கடந்த 2015.12.07ஆம் திகதி காரியாலய உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன் இடம்பெற்றது.



# உங்களுக்கு தெரியாத நான்



# இந்தத் தொழிலின் மூலம் மக்களுக்கு சேவை செய்யக்கூடிய சந்தர்ப்பம் உருவாகியுள்ளது...

– பிரியலால் அரங்கல
HNB கிராமின் தலைமை செயற்பாட்டு உத்தியோகத்தர்

**முழுப் பெயர்:** விதானகே சுசிர பிரியலால் அரங்கல
**பிறந்த திகதி:** 1966.01.15
**உங்களுக்கு பிடித்த பாடசாலை பாடசாலை:** நான் இரண்டு பாடசாலைகளில் கல்வி கற்றேன். தரம் ஒன்றில் இருந்து தரம் ஆறு வரை ஹோ/ஜல்தர மகா வித்தியாலயத்திலும் ஆறாம் ஆண்டில் இருந்து கொழும்பு நாலந்தா கல்லூரியிலும் கல்வி கற்றேன். இவ்விரண்டு பாடசாலைகளிலும் கிராமத்தில் படித்த பாடசாலையே எனக்கு மிகவும் பிடித்த பாடசாலையாகும். ஏனெனில் இந்தப் பாடசாலை எமது வீட்டில் இருந்து அரை கிலோமீற்றரில் அமைந்திருந்தது. பாடசாலைக்கு நான் நடந்தே சென்று வருவேன். இன்று இருப்பதை போன்று அல்லாது கிராமப்புற மண்வாசனையுடன் திகழ்ந்ததுடன் சிறுவயதில் நாம் அனுபவித்த இன்பங்கள் என்றும் என் மனதில் இருந்து அகழாது இருக்கின்றமைக்கு ஜல்தர மகாவித்தியாலயம் சான்றாகும்.
**பாடம்:** புவியியல் பாடமாகும். உலக நாடுகள் தொடர்பில் அறிந்து கொள்ளவும் வரலாற்றுத் தகவல்களை படித்துக் கொள்ளவும் எனக்கு ஆசையாக இருந்தது. இதனால் இந்தப் பாடத்தை ஆர்வத்துடன் கற்றேன்.
**விளையாட்டு:** எல்லே, கரப்பந்து, கிரிக்கட், கெரம், செஸ் ஆகிய விளையாட்டுக்களில் நான் ஈடுபட்டுள்ளேன். எனினும் கரப்பந்து போட்டியில் தேசிய மட்டத்தில் வெற்றி பெறும் அளவுக்கு ஜல்தர கனிஷ்ட விளையாட்டு கழகம் அக்காலத்தில் திகழ்ந்தது. இந்தப் விளையாட்டுப் போட்டிகளில் எனக்கு விருப்பமான விளையாட்டு கிரிக்கட் ஆகும்.
**பாடசாலைக்காலத்தில் எதிர்கால இலட்சியமாக இருந்தது:** சிறு பராயத்தில் ஏனைய மாணவர்களைப் போன்று எனக்கும் வைத்தியராக வரவேண்டுமென்ற ஆசை இருந்தது. எனினும் சாதாரண தரத்தில் கல்வி கற்ற போது வர்த்தகத்துறையை விரும்பி படித்தேன். அப்படி பார்க்கும் போது நிதித்துறையில் தொழில் புரிய வேண்டுமென்றே நான் தீர்மானித்திருந்தேன். இன்று அந்தக் கனவு நனவாகியுள்ளது.
**முதல் தொழில் மற்றும் மிகவும் விருப்பமாக செய்த தொழில் :** நான் ஆரம்பத்தில் கணக்காய்வு நிறுவனத்தில் (Audit Firm) கணக்காய்வாளராக கடமையாற்றினேன். அது 1989ஆம் ஆண்டு காலப்பகுதியாகும். அங்கு பதினைந்து வருடங்கள் தொழில் புரிந்தேன். அந்தக் காலப்பகுதியில் பல நிறுவனங்களின் கணக்குகளை பராமரித்து வந்தேன். அன்று என்னுடன் தொழில்புரிந்த பலர் கிராமின் நிறுவனத்துடன் இணைந்து கொண்டனர். பலரும் என்னை கிராமின் நிறுவனத்தில் இணைந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்த போதும் நான் அதற்கு இணங்கவில்லை. 2005ஆம் ஆண்டு கிராமின் நிறுவனத்தில் இணைந்து கொண்டேன். அன்று கொத்தலாவல அவர்கள் என்னை இரவு எட்டு மணிக்கு நேர்முகப்பரீட்சை நடத்தினார். எனக்கு அதுவும் மறக்க முடியாத நிகழ்வு. எனினும் இந்த இரண்டு தொழிலும் எனக்கு மிகவும் விருப்பமான தொழில்களாகும். ஏனெனில் எந்தத் தொழிலையும் நான் ஆர்வத்துடன் செய்வதலாகும்.
**வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவம்:** நான் வெளிவாரி பட்டப்படிப்பை மேற்கொண்ட போது எமது வகுப்பில் கல்வி கற்ற மாணவியுடன் எனக்கு நட்பு ஏற்பட்டது. இது தொடர்பில் நான் அவளிடம் கூறாமல் பல காலம் உற்ற நண்பர்களாக இருந்தோம். இறுதியில் நான் எனது காதலை தெரிவிக்க தீர்மானித்தேன். ஒன்றரை வருட காலம் தெரிவிக்காமல் இருந்த காதலை அன்று தெரிவித்த நாட்களை இன்றும் மறக்க முடியாது.







**வாழ்க்கையில் மிகவும் மகிழ்ச்சியான நாளும் துக்கமான நாளும்:** எனது மகன் பிறந்தது என் வாழ்வில் மகிழ்ச்சிக்குரிய நாளாகும். அவன் பெயர் யதிந்து ஷமுபதி அரங்கல. என்வாழ்வில் எனது மனைவி மூன்றாண்டுகளுக்கு முன்னர் கடும் நோய்வாய்ப்பட்டிருந்த நாட்களை துக்கமான நாளாக கருதுகிறேன்.
**உங்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட அனுபவங்கள்:** நான் 1996ஆம் ஆண்டு ஜனவரி 12ஆம் திகதி திருமணம் செய்து கொண்டேன். எனக்கு ஒரு வார காலம் திருமண லீவு கிடைத்தது. திருமணத்திற்கு பின்னர் ஜனவரி 30ஆம் திகதி தொழிலுக்கு வந்தேன். அப்போது நான் செலிங்கோ ஹவுஸின் ஒன்பதாவது மாடியில் வேலை செய்து கொண்டிருந்தேன். மத்திய வங்கியில் குண்டு வெடித்தது அன்றைய தினம். மேல்மாடியில் இருந்த எங்களுக்கு குண்டு வெடித்த நிகழ்வுகளை நேரடியாக பார்க்க முடிந்தது. எமது காரியாலத்தில் ஒன்றாக வேலை செய்த பலர் உயிர்துறந்தனர். ஒரு சிறுகாயங்கள் கூட எனக்கு ஏற்படாதது என்றும் வாழ்வில் நினைத்து பார்க்க முடியாத ஒன்றாகும்.
**கடந்த காலத்துக்கு செல்வதற்கான வாய்ப்பொன்று கிடைத்தால்** எந்தவொரு மாற்றத்துக்கும் தயாராக இருக்க வேண்டும்.



**வாழ்க்கையில் எடுத்துக் கொள்ளும் சிறந்த காலப்பகுதியும் அதற்கான காரணமும்:** பாடசாலைக் காலம். அதிலும் ஆறாம் ஆண்டில் கிராமப்புற பாடசாலையில் கற்ற காலப்பகுதியை.
**வாழ்க்கையில் இழந்த பெறுமதிக்க நபர் அல்லது சந்தர்ப்பம்:** மனைவியின் அப்பா இறந்தது. அவர் HNB வங்கியில் சிரேஷ்ட முகாமையாளராக தொழில் புரிந்தார். இன்று அவர் இருந்திருந்தால் நான் பல விடயங்களை கற்றுக் கொள்ள முடியுமாக இருந்திருக்கும்.
**மாற்றிக் கொள்வதற்கான சந்தர்ப்பம் கிடைத்தால் உங்களிடம் காணப்படும் குறைபாடுகள்:** தலைவரிடம் காந்தியடிகளின் பண்புகளும் ஹிட்லரின் பண்புகளும் கட்டாயமாக இருக்க வேண்டும். தீர்மானம் எடுக்கும் போது ஹிட்லரைப் போன்று தீர்மானம் எடுக்க வேண்டும். எனினும் நான் பலரது ஆலோசனைகளைக் கேட்டு அதன்படி தீர்மானம் எடுப்பவராகவே இருக்க
**எதிர்கால இலக்கு:** தொழிலை சிறப்பாக நிறைவு செய்து இளைப்பாறிய பின்னர் சமய அனுட்டானங்களில் ஈடுபட்டு இறுதிக்காலத்தை குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக செலவிடுவதை விரும்புகிறேன்.

12ஆம் பக்கம்

ஆக்கம்
மஞ்சுள ஹெட்டியாராச்சி

# HNB கிராமின் கிளையின் செயற்பாடுகள்

# எதிர்கால சந்ததியினர் உரிமைகோரும் செழிப்பான நாட்டை கட்டியெழுப்புவதே எமது நோக்கமாகும்

## - HNB கிராமின் அநுராதபுரம் கிளை

தலைநகருக்கு அருகாமையில் ஆரம்பிக்கப்பட்ட கிராமின் நிறுவனம் இன்று நாடளாவிய ரீதியில் ஆலவிருட்சமாக வியாபிக்க அவ்வளவு காலம் எடுக்கவில்லை எனலாம். இலங்கையில் வறுமையை போக்குவதற்காக சிறிதளவேனும் பங்களிப்பை வழங்க முடியுமென்ற நோக்கத்தில் ஆரம்பிக்கப்பட்ட கிராமின் திட்டமானது இன்று நாட்டில் பரவலாக கிளைகள் ஆரம்பிக்க கிராமின் நிறுவன முகாமைத்துவத்தின் அளப்பரிய தியாகங்களுக்கு மத்தியிலாகும். எவ்வாறாயினும் தமது பிரதேசத்தில் கிராமின் கிளை அல்லது மத்திய நிலையம் கட்டாயம் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்ற பொதுமக்களின் இரண்டு வேண்டுகோளுக்கு இணங்கவே இன்று நாடளாவிய ரீதியில் தொழிற்துறையுடன் சம்பந்தப்பட்ட குடும்பங்களுடன் விவசாயம் துறையில் ஈடுபடுவர்களையும் இணைத்து கிராமின் கோட்பாட்டுகளை அப்பிரதேச மக்களுக்கு தெளிவுபடுத்தியதன் மூலம் இன்று ஆயிரக்கணக்கான மக்கள் கிராமின் நிறுவனத்தில் இணைந்து கொண்டுள்ளனர் எனலாம். ர்டே கிராமின் அநுராதபுர கிளையின் செயற்பாடுகள் மற்றும் நிறுவனத்தின் தற்போதைய செயற்பாடுகள் தொடர்பில் அதன் முகாமையாளர் சுரங் ஹேரத் மெஹெவரவுக்கு கருத்து தெரிவித்தமையை கீழே தருகின்றோம்.

எமது கிளை ஸ்தாபிக்கப்பட்ட இடத்தில் அல்லாமல் சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்க இடத்தில் இருந்தே இப்போது நாம் செயற்பட்டு வருகின்றோம். அது 2012ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 30ஆம் திகதியாகும். வாடிக்கையாளர்களுக்கு மேலும் சிறப்பான சேவை வழங்கும் நோக்கில் புதிய முகவரிக்கு







நொச்சியாகம சேவை மத்தியநிலையம்

கிராமின் கிளை வியாபிக்க காரணமாக அமைந்துள்ளது. இலங்கையின் வடமத்திய மாகாணத்தில் 2003.05.02ம் திகதி கிராமின் கிளை ஆரம்பிக்கப்பட்டது. கிராமின் வலைமைப்பில் அது 11ஆவது கிளையாக அநுராதபுரத்தை மையமாகக் கொண்டு ஸ்தாபிக்கப்பட்டது.

இடமாற்றமடைந்தோம். நிதிப் பங்களிப்புக்கு மேலதிகமாக நாம் எமது வாடிக்கையாளர்களுக்கு அவர்களின் வியாபார செயற்பாடுகளுக்கு தேவையான ஆலோசனைகள், நவீன நுட்பங்களை எவ்விதம் கையாள்வது போன்ற விடயங்களையும் இலவசமாக வழங்கி வருகின்றோம். இப்பிரதேசத்தில் உள்ள மக்கள் அதிகளவில் விவசாயத்துடன் தொடர்புடையவர்கள். கிணறுகள் காணப்பட்டால் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு அவர்களே தீர்வினைப் பெற்று காலை மாலை நேரங்களில் பயிர்களுக்கு தேவையான நீரை பெற்றுக் கொள்ள முடியும். இது தொடர்பில் நாம் அவர்களுக்கு ஆலோசனை வழங்கினோம். நீரை குழாய்கள் மூலம் பரப்பும் (பீச்சியடிக்கும்) முறையை நாம் அறிமுகப்படுத்தினோம். அது மாத்திரமன்றி, அந்த இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்கு தேவையான கடனையும் நாம் பெற்றுக் கொடுத்தோம். இந்த முறையினால் அதிக அறுவடையை பெறக்கூடியதாக இருப்பதாகவும் நேரவிரயம் கட்டுப்படுத்தப்படுவதாகவும் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர். அவ்வாறே காளாண் உற்பத்தியில் அதிக வருமானம் உழைக்க முடியுமென்று நாம் எமது வாடிக்கையாளருக்கு ஆலோசனை வழங்கியதுடன் இது தொடர்பான பயிற்சி வேலைத்திட்டங்களும் ஒழுங்கு செய்யப்பட்டன. நாம் கிராமின் நிறுவனம் என்ற கோட்பாட்டில் ஒரே குடும்பமாக செயற்பட்டு வருகின்றோம். எமது கிளை ஊழியர்களைப் போன்றே எமது வாடிக்கையாளர்களை எம்மில் ஒரு குடும்பமாக இணைத்து கடமையாற்றுகின்றோம். இதுவே ஏனைய நிதி நிறுவனங்களுக்கும் எமக்கும் இடையிலான வேறுபாடாகும். இதன் காரணமாகத்தான் எமது அங்கத்தவர்களின் குடும்பங்களில் ஏற்படும்

தொடர் 7



HNB கிராமின் அநுராதபுரம் கிளை உத்தியோகத்தர்கள்

### எச்.என்.பி.கிராமின் அநுராதபுரம் கிளை பணியாளர்கள்

பிரதேச முகாமையாளர்
காஞ்சன பெலிகும்புர
பிரதேச கணக்காளர்
ரணில் பிரசாத்
கிளை முகாமையாளர்
சுரங்க ஹேரத்
உதவி கிளை முகாமையாளர்
இந்துனில் அல்விஸ்
கனி‘ட உதவி முகாமையாளர்
ரொசான் ரணசிங்க
சனத் பிரியங்கர
கடன் நிறைவேற்று- நுண்நிதி
ரோஹித குமார
அநுராத புபுது
மொஹமட் மசாஹிர்
அரவிந்த சம்மிக
துஸார தேவேந்திர
பிரதீப் ஜயரத்ன
சுபன் அசேல
தமித் பிரியங்கர - நிறைவேற்று சிரே‘ட நிறைவேற்று கணக்கு மற்றும் நிர்வாகம்
ஆலிந்த ஹர்ஷ
கனி‘ட கடன் நிறைவேற்று -நுண்நிதி
சஞ்சீவ ஹெட்டியாராச்சி
சுபாஷ் தொடங்கொட
ஜயமால் பிரேமரத்ன
திலின தினேஷ்
நிறைவேற்று நீதி
தனுஷ்க திலங்க
கனி‘ட நிறைவேற்று
பிரதீப் திலின
பிரியலங்கா பொலிகும்புர
கனி‘ட சந்தைப்படுத்தல் நிறைவேற்று
லக்மால் கமமே
சந்தைப்படுத்தல் நிறைவேற்று -குத்தகை
சந்தன பண்டார

**நொச்சியாகம சேவை மத்தியநிலைய உத்தியோகத்தர்கள்**

உதவி சேவை மத்தியநிலைய முகாமையாளர்
சுசந்த குமார கருணாரத்ன
சிரே‘ட நிறைவேற்று (கணக்கு)
பிரியந்த கமகே
கனி‘ட கடன் நிறைவேற்று
வஜிர லக்மால்
மனோஜ் ஜயசேன
இஷான் மதுரங்க

ஆக்கம்
மஞ்சுள பிரபாத் ஹெட்டியாராச்சி
படப்பிடிப்பு
லக்ஷ்மன் குமாரதுங்க



**காஞ்சன பெலிகும்புர**
பிரதேச முகாமையாளர்



**ரணில் பிரசாத்**
பிரதேச கணக்காளர்



**சுரங்க ஹேரத்**
கிளை முகாமையாளர்



**இந்துனில் அல்விஸ்**
உதவி கிளை முகாமையாளர்



**சுசந்த குமார**
உதவி முகாமையாளர்



**ரொஸான் ரணசிங்க**
கனிஷ்ட உதவி முகாமையாளர்



**சனத் பிரியங்கர**
கனிஷ்ட உதவி முகாமையாளர்



**ஆலிந்த ஹர்ஷ**
சிரேஷ்ட நிறைவேற்று கணக்கு

# கிராமின் நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டம் எமக்கு நல்ல நல்ல அறுவடையை தருகிறது



HNB கிராமின் நிறுவனம் கடன் வழங்கும் செயற்பாட்டுக்கு மேலதிகமாக சேவை செய்யும் நிறுவனமாகும். தனது வாடிக்கையாளருக்கு தேவையான அறிவு, ஆலோசனைகளை எவ்வித பிரதி இலாபங்களும் பெறாமல் செயற்படுவதும் அது அவர்களின் பொறுப்பு மற்றும் கடமை என்ற உணர்வுடன் சேவையாற்றுவதாலாகும். அநுராதபுரம் போன்ற உலர் வலயப் பிரதேசங்களில் நீரைப் வீண்விரயம் செய்யாமல் உச்சப்பயனை அடைந்து கொள்ளும் முறையை அறிமுகப்படுத்தி இன்று முன்னணி நிறுவமாக திகழ்வதற்கு அதன் பெறுபேற்றை அவதானிக்கும் போது அறிந்து கொள்ளலாம். இன்று பல ஏக்கர் காணியில் நெற்செய்கையில் ஈடுபடுவதற்கு நீரைப் பாய்ச்சியடிக்கும் திட்டத்தை அறிமுகப்படுத்திய HNB கிராமின் அங்கத்தவர்கள் மாத்திரமல்லாது ஏனைய விவசாயிகளும் இந்தத் திட்டம் இன்று நல்ல பயனை அளித்துள்ளது என்று HNB கிராமின் அங்கத்தவர் திருமதி ஆர்.பி.சுமனாவதி எம்மிடம் தெரிவித்தார்.

நாம் 15 வருடங்களாக பயிர்ச் செய்கையில் ஈடுபட்டு வருகின்றோம். நெல், வெங்காயம், கத்தரி, பீட்ரூட், மிளகாய் போன்ற சகலதும் பயிரிடப்படுகின்றன. HNB கிராமின் நிறுவனத்தில் கடன் பெற்று பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது HNB கிராமின் உத்தியோகத்தர்கள் எமக்கு நீரைப் பாய்ச்சியடிக்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தி னார்கள். நாம் எதிர்பார்க்காததைப் போன்று எமக்கு நல்ல பலன் கிடைத்தது. முன்னர் கிடைத்த அறுவடையைப் பார்க்க இந்த திட்டத்தினால் எமக்கு நல்ல அறுவடை கிடைக்கிறது. இந்தத் திட்டத்தை எம்முடன் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் ஏனையவர்களும் பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடக்கூடிய விடயமாகும்.

ஆர்.பி.சுமனாவத்தி, ஹொரம்பாகம, ராஜாங்கனை.

## வெற்றிக் கொடியின் அருகில்



## கிராமின் நிறுவனத்தில் கடனைப் பெற்றே நாம் இந்த இயந்திரத்தை கொள்வனவு செய்தோம்...

நீரில் இரசாயனப் பதார்த்தங்கள் கலப்பதால் வடமத்திய மாகாணத்தில் உள்ள மக்கள் சிறுநீரக நோய்க்கு உள்ளாகியிருப்பது குறித்து கவனம் செலுத்த வேண்டுமென்பது அனைவரினதும் வேண்டுகோளாகும். இதற்கு தீர்வாக குடிநீரை சுத்தப்படுத்தி அதிலுள்ள நச்சுத்தன்மையை போக்கி மக்களுக்கு சுத்தமான நீரைப் பருக வேண்டுமென சுகாதாரத்துறையினர் ஆலோசனை வழங்கியுள்ளனர். இதன் பெறுபேறாக குடிநீரை சுத்தமான நீராக மாற்றி மக்களுக்கு விநியோகிக்கும் வேலைத்திட்டம் இன்று வடமத்திய மாகாணத்தில் பிரதான விற்பனைப் பொருளாக இடம்பெற்று வருகிறது. மியுரியன் ஜயவீரவும் நாம் சந்தித்த அவ்வாறான வியாபாரம் செய்யும் HNB கிராமின் அங்கத்தவராகும்.

“முதலில் நான் தேயிலை விற்பனையில் ஈடுபட்டு வந்தேன். அதன் பின்னர் நீரை சுத்தப்படுத்தும் விற்பனையை ஆரம்பித்தேன். இந்தப் பிரதேசத்தில் 90வீதத்துக்கும் அதிகமானவர்கள் நீரை பணம் கொடுத்தே பெறுகின்றனர். கிராமின் நிறுவனத்தில் கடனைப் பெற்றே இந்த இயந்திரத்தினை கொள்வனவு செய்தோம். இதற்காக 125,000ரூபாவை கிராமின் நிறுவனத்தில் கடனாகப் பெற்றோம். நாளாந்தம் சுமார் 400-500லீற்றர் வரை நாம் நீரை விநியோகிப்பதால் இந்த வியாபாரம் நல்ல வெற்றியளித்துள்ளது. கிராமின் நிறுவனம் எம்முடன் இருப்பதால் எந்தவொரு வியாபாரத்தையும் அச்சம், பயமின்றி முன்னெடுக்க முடியும்”



மியுரியன் ஜயவீர, யாயதெக, ராஜாங்கனை.

## கிராமின் திட்டங்களை அனைவரும் பெருமையாக புகழ்ந்து பேசுகின்றனர்...

வீட்டு வேலைகளை செய்துகொண்டு சிறு வியாரமொன்றை ஆரம்பித்தால் நல்லதென்று சுமார் 3 ஆண்டுகளுக்கு முன்னர் யோசித்தேன். எனினும் அதனை ஆரம்பிப்பதற்கான பணத்தை திரட்டுவது எனக்கு கஷ்டமாக இருந்தது. உள்ளத்தில் ஆசை இருந்த போதும் அதனை நிச்சயமாக அடைந்துகொள்ள முடியுமென்ற உணர்வு என்னில் இருந்தது. இவ்வாறான நிலையில் கிராமின் கடன் திட்டம் தொடர்பில் அயலவர்கள் ஊடாக அறிந்து கொள்வதற்கான வாய்ப்பு எனக்கு கிட்டியது.

இந்த நிறுவனத்தில் இணைந்து கொண்ட அனைவரும் கிராமின் திட்டங்களை புகழ்ந்து பேசினர். உள்ளத்தில் எழுந்த ஒரு வகை ஈர்ப்பின் காரணமாக கிராமின் நிறுவனத்தில் அங்கத்தவராக இணைந்து கொண்டேன். நான் முதன் முதலில் 20,000ரூபாவை கடனாகப் பெற்றேன். அந்தப் பணத்தைக் கொண்டு கஞ்சி விற்பனை நிலைய மென்றை ஆரம்பித்தேன். தற்போது இந்த வியாபாரத்தின் மூலம் நல்ல வருமானம் கிடைக்கிறது. இறுதியாக நான் 120,000ரூபா கடன் பெற்றேன். கிராமின் நிறுவனத்துக்கு நல்லாசி கிடைக்க வேண்டும். இன்று கஞ்சி விற்பனைக்கு மேலதிகமாக டொய்ஸ் விற்பனையும் செய்து வருகின்றேன்.




ஆர்.எம்.பி.குமாரி, 2ஆம் கட்டை, அநுராதபுரம்

### தொடர் 6

எதிர்பாராத சம்பவங்களுக்கு எமது குடும்பத்தில் ஏற்பட்ட இழப்பாக கருதி அவர்களுக்கு உதவி ஒத்தாசைகளை வழங்கி வருகின்றோம்.

கடந்த காலத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட எமது அங்கத்தவர்களின் குடும்பங்களுக்கு உலர் உணவுகள் மற்றும் ஏனைய உதவிகளையும் எம்மால் முடிந்தளவு செய்வதற்கும் முடியுமாக இருந்தது.

வெசாக் பொசன் நாட்களில் கடந்த மூன்றாண்டுகளாக எமது கிளைக்கு முன்னாள் தன்சல வழங்கப்பட்டு வருகின்றது. இதன் மூலம் பிரதேசத்தில் உள்ள அனைத்து மக்களும் சகோதர உணர்வுடன் செயற்பட வேண்டுமென்ற நோக்கத்திலாகும்.

இன்று எமது பிரதேசத்தில் எம்முடன் போட்டியிடும் 75 நிதி நிறுவனங்கள் காணப்படுகின்றன. அவ்வாறே நாளாந்தம் கடன் வழங்கும் நபர்களும் இப்பிரதேசத்தில் உள்ளனர். இவர்களில் நாமே முன்னிலையில் இருக்கின்றோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்க விரும்புகிறேன்.

எமது சேவையை மேலும் விரிவடையச் செய்யும் நோக்கில் 2015 ஜுன் மாதம் 06ஆம் திகதி நொச்சியாகமயில் மத்திய நிலையமொன்றை ஆரம்பித்தோம். இதனூடாக சாலியவெவ, ராஜாங்கணை, குகுல்கடுவ, விலச்சிய, தம்புத்தேகம ஆகிய பிரதேச மக்கள் எமது சேவை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கிறது.

அநுராதபுர கிளையின் ஊடாக மரதன்கடவல, எப்பாவலை, திறப்பனை, தலாவ, மிஹிந்தலை, விலச்சிய, தம்புத்தேகம ஆகிய பிரதேசங்களில் எமது சேவையைப் பெற்றுக் கொள்ள முடியும். இன்று எமது கிளையின் கீழ் செயற்படும் 245 மத்திய நிலையங்கள் காணப்படுவதுடன் 4919 பேர் அங்கத்தவர்களுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது. அவர்களின் வியாபார செயற்பாடுகளுக்காக அண்ணளவாக 609மில்லியன் ரூபா கடன் வழங்கப்பட்டுள்ளது.

அங்கத்தவர்களின் நாளாந்த செலவுகளை ஈடுசெய்யும் உடனடிக் கடன் “சஹன நய” இலகு கடன் திட்டத்தின் மூலம் எமது அங்கத்தவர் பிள்ளைகளின் கல்வி செலவுகளுக்காகவும் அத்தியாவசிய செலவுகளுக்காகவும் நாம் பல்வேறு சேவைகளை செய்துள்ளோம். இதன் மூலம் கடந்த காலத்தில் 78 மில்லியன் ரூபா நிவாரணக் கடனாக வழங்கப்பட்டுள்ளது. அங்கத்தவர் மற்றும் அவர்களின் குடும்ப உதவிக்காக கடன் பாதுகாப்பு நிதியத்தின் மூலம் இழப்பீட்டுத் தொகையாக 589,900ரூபா வழங்குவதற்கும் இக்காலப்பகுதியில் நடவடிக்கை எடுத்துள்ளோம்.

பாரம்பரிய வளம் மற்றும் பெறுமதிமிக்க சொத்துக்களை பாதுகாத்து எதிர்கால சந்ததியினர் அதற்கு உரிமை கோரும் பரம்பரையொன்றை உருவாக்குவதே HNB கிராமின் அநுராதபுர கிளையின் பிரதான நோக்கமாகும். இதற்காக எனது தகுதிக்கேற்ற சரியான முடிவுகளை மதிப்பீடு செய்து தமது அங்கத்தவர்களுக்கு தேவையான நிதிக் கட்டமைப்பை ஏற்படுத்திக் கொடுப்பதே HNB கிராமின் அநுராதபுர கிளையின் எதிர்பார்ப்பாகும்.

# புதுமைமிகு உலகம்





தொலைபேசியைக் கண்டுபிடித்த அலெக்சாண்டர் கிரகம்பெல் தனது மனைவிக்கோ அல்லது தனது தாயாருக்கோ ஒருநாளும் தொலைபேசியில் பேசியதில்லை. ஏனெனில் இருவருக்கும் காது கேளாது.



புருட்செலட் என்ற பெயரில் தயாரிக்கப்படும் செயற்கை மரத்தினால் ஒரே தடவையில் ஆறு முதல் எட்டு வகையான பழங்கள் காய்க்கின்றன.



தீக்கோழியின் கண்கள் அதன் மூளையை விட பெரியது



ஒட்டகச் சிவிங்கியின் நாக்கு 21 அங்குலமாகும். நாக்கினால் தனது அங்கங்களை சுத்தமாக்கிக் கொள்கிறது.



மரண தண்டனை விதிப்பதற்காக பயன்படுத்தப்படும் மின்சார நாட்காலியை பல்வைத்தியரே அறிமுகம் செய்தார்.




எமது உடம்பு வினாடிக்கு 15 மில்லியன் வெண்குருதி கலங்களை உருவாக்குகின்றது

## உங்களது முடிவு எந்தளவு சரியானது?

### நீங்களே அறிந்து கொள்ளுங்கள்

இரண்டு கேள்விகள் உங்களிடம் கேட்கிறேன். அந்தக் கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாதென்று கூற வேண்டாம். எனினும் சற்று வித்தியாசமானது.

முதலாவது கேள்வி:

உங்களுக்கு தெரிந்த பெண்ணொருவர் இருக்கிறார் என்று வைத்துக் கொள்வோம். இப்போது அவள் கர்ப்பிணிப் பெண். அவர் இதற்கு முன்னர் எட்டு பிள்ளைகளை பெற்றெடுத்துள்ளார். இவர்களில் மூவர் செவிப்புலனற்றவர்கள். இருவருக்கு கண் பார்வை இல்லை. மற்றொருவர் பிறக்கும் போது மனநோயினால் பாதிக்கப்பட்டவராகும். இது மாத்திரமன்றி, அந்த பெண் சிபிலிஸ் என்றொரு நோய்க்கும் உள்ளாகியிருந்தார்.

இந்நிலையில் மீண்டுமொரு குழந்தையை பிரசவிப்பதற்கு எந்தவொரு நபராவது விரும்புவார்களா?

சில வேளைகளில் அவள் தொடர்பிலும், அவளுக்கு கிடைக்க உள்ள பிள்ளை தொடர்பாகவும் சிந்தித்து அவள் கருக்கலைப்பு செய்தால் நல்லதென்று நினைக்கலாமல்லவா?

இதற்கு நான் சரியான பதிலை பிறகு சொல்கிறேன். அதற்கு முன்னர் எனது இரண்டாவது கேள்வியை வாசியுங்கள்.

இரண்டாவது கேள்வி:

முழு உலகிற்கும் ஏற்ற தலைவர் ஒரு வரை தெரிவு செய்யும் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. அந்தத் தலைவரை தெரிவு செய்யும் பொறுப்பு உங்களிடம் ஒப்படைக்கப்படுகிறது. அந்தப் தலைமைக்கு மூவர் மாத்திரமே போட்டியிடுகிறார்கள் என்று கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

முதலாவது போட்டியாளர்:

மிகவும் நேர்மையற்ற அரசியல் கொள்கையை கடைப்பிடிக்கும் நபர் இவராகும். ஒரு விடயத்தை செய்வதற்கு முன்னர் சோதிடர்களிடம் ஆலோசனை பெற்றுக் கொள்வார். மாற்றான் மனைவியர் இருவருடன் தினமும் சுகபோகம் அனுபவிப்பர். தொடர்ந்து புகைப்பிடிக்கும் பழக்கத்தை கொண்ட இவர் நாளாந்தம் 8 முதல் 10 கிளாஸ் மார்டீன் விஸ்கியை குடிப்பவராகும்.

இரண்டாவது போட்டியாளர்

இரு தடவை, மிகவும் கேவலமான முறையில் இவரை காரியாலத்தில் இருந்து வெளியில் தூக்கியெறியப்பட்டுள்ளது. தனது குடியிருப்புக்கு சூரிய வெளிச்சம் நடுவானில் இருக்கும் போதே நித்திரையில் இருந்து வெளியே வரும் மகாராஜாவாகும். பாடசாலை சென்ற போது அபின் என்ற போதைப் பொருளை உட்கொண்டு பல சந்தர்ப்பங்களில் தண்டனை அனுபவித்துள்ளார். நாளாந்தம் மாலை நேரங்களில் விஸ்கி கால்வாசி போத்தல் குடிக்கும் பழக்கமுடையவர்.

மூன்றாவது போட்டியாளர்

இவர் அனைவரையும் மதிக்கும் புத்திசாலியான, உற்சாகமூட்டும் சிறந்த போர் வீரனாகும். மாமிசங்களை உண்ணமாட்டார். குண்டுமணி அளவே பியர் குடிக்கும் பழக்கமுடையவர். திருமண வாழ்க்கையைத் தவிர்ந்த வேறெந்த பெண்ணையும் ஏறெடுக்கும் பார்க்க மாட்டார்.

நல்லது. இதில் உங்களது வாக்கு யாருக்கு? யாரைத் தெரிவு செய்வீர்கள்? முதலில் தீர்மானியுங்கள்.

பின்னர் எதனையும் யோசிக்காமல், விடையை அறிந்து கொள்வதற்காக தொடர்ந்து வாசியுங்கள்.

1ஆவது போட்டியாளர் - ப்ரூன்க்லீன் ஜே ரோஸ்வெல்ட்

2ஆவது போட்டியாளர் - வின்ஸ்டன் சர்ச்சில்

3ஆவது போட்டியாளர் - அடொல்ப் ஹிட்லர்

ஆம். அதுமாத்திரமன்றி, நான் ஆரம்பத்தில் குறிப்பிட்ட கர்ப்பிணிப் பெண் தொடர்பான கேள்விக்கு பதில்:

அவள் கருக்கலைப்பு செய்தால் நல்லதென்று நீங்கள் நினைக்கவில்லையா?

அது அவ்வாறாயின், அந்தப் பெண்ணை ஏற்றுக் கொண்டு நீங்கள் ஒரு குழந்தையை கொல்வதற்கு முயற்சி செய்ததைப் போன்றதாகும், உலகப்புகழ் பெற்ற பாடகரான “பிதோவன்” என்றால் நீங்கள் ஏற்றுக் கொள்வீர்களா?

இணையத்தளத்தில் இருந்து




ப்ருன்க்லீன் ஜே.ரோஸ்வெல்ட்



வின்ஸ்டன் சர்ச்சில்



அடொல்ப் ஹிட்லர்



பிதோவன்


# HNB கிராமின் ஒன்றுகூடலின் போது...




HNB கிராமின் நிறுவனத்தினால் வருட இறுதியில் நடத்தப்படும் வருடாந்த ஒன்றுகூடல் டிசம்பர் மாதம் 17ஆம் திகதி பிட்டகோட்டையில் அமைந்துள்ள ஷோலீஸ் ஹோட்டலில் நடைபெற்றது. HNB கிராமின் பைனான்ஸ் லிமிட்டெட் உப தலைவர் பி.பிரேமலால், முகாமைத்துவ பணிப்பாளர் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் சமிந்த பிரபாத், பணிப்பாளர்களான திருமதி சந்தமினி பெரேரா, கிறிசாந்தி தம்பையா ஆகியோரின் பங்குபற்றலுடன் நடைபெற்ற இந்த ஒன்றுகூடலில் தலைமைக்காரியாலய சகல ஊழியர்களும் பிரதேச முகாமையாளர்கள், பிரதி பொது முகாமையாளர்கள், உதவி முகாமையாளர்களும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின் விசேட அம்சமாக HNB கிராமின் நிறுவன ஒவ்வொரு பிரிவுகளிலும் பல்வேறு நிகழ்வுகள் மேடையேற்றப்பட்டன.

அன்று மாலை ஆரம்பிக்கப்பட்ட இந்நிகழ்வு நள்ளிரவு வரை நடைபெற்றதுடன் புத்தாண்டை வரவேற்றது மாத்திரமன்றி டிசம்பர் மாதம் 18ஆம் திகதி முகாமைத்துவப் பணிப்பாளர் சமிந்த பிரபாத் அவர்களின் பிறந்த நினைவு கூறுவதற்கும், வாழ்த்து தெரிவிப்பதற்கும் சந்தர்ப்பமாக அமைந்தது. இந்நிகழ்வுகளை அற்புதமாக படம் பிடித்த குணசேகரவின் கமராவில் இருந்து ஒரு சில படங்களை காணலாம்.




## எந்தவொரு வங்கியும் எனக்கு கடன் வழங்க விரும்பவில்லை

ஹிதோகம, கிரிமெட்டி பிரதேசத்தை அண்மித்ததாக ஸ்தாபிக்கப்பட்டுள்ள வேல்டிங் வேலைத்தளமும், வாகனங்கள் திருத்துமிடமும், வாகன உதிரிப்பாகங்களை விற்பனை செய்யும் நிலையமும் ஒன்றாக காணப்படுவது அப்பிரதேச மக்களின் நன்மதிப்பைப் பெற்ற பிரியந்த அயன் வேர்க்ஸ் என்ட் சேர்விஸ் சென்டர் என்ற நிறுவனமாகும். சிறப்பான சேவைகளை வழங்கி வரும் இந்த விற்பனை நிலையத்தின் உரிமையாளரான பிரியந்தவை பார்ப்பதற்கு மிகவும் எளிமையான தோற்றத்தில் எம்முடன் உரையாடினார். கராஜ் வேலைக்கு பயன்படுத்தும் ஆடையுடன் ஏனைய ஊழியர்களுடன் தொழில் முயற்சியில் ஈடுபடும் பிரியந்த, கிராமின் நிறுவனத்தில் "ஈஸி லோன்" கடனைப் பெற்றுக் கொண்டதன் மூலம் எம்முடன் இணைந்து கொண்டார்.

நான் இந்த வேல்டிங் தளத்தை எனது சொந்த வயல்நிலத்தை 30,000ரூபாவுக்கு அடகு வைத்தே ஆரம்பித்தேன். எனது வியாபாரம் நாளாந்தம் விருத்தியடைந்த போது எனக்கு கடன்பெற வேண்டிய தேவை ஏற்பட்டது. எனினும் நம்பிக்கையாக விளங்கும் வங்கிகளில் இருந்து எனக்கு கடனைப் பெற முடியாத நிலை ஏற்பட்டது. ஏனெனில் அவர்களால் கேட்கும் ஆவணங்களை சமர்ப்பிக்க முடியாத காரணத்தினாலாகும். இறுதியில் நான் HNB ஈஸிலோன் கடனை கிராமின் நிறுவனத்தில் பெற முடியுமென்பதை அறிந்து கொண்டேன். கிராமின் நிறுவன உத்தியோகத்தர்களிடம் பேசி எனது வியாபாரம் தொடர்பாக தெளிவுபடுத்தினேன். அதன் பிறகு கடனுக்கு விண்ணப்பித்தேன். அவர்கள் எனது வியாபாரத்தை பார்வையிட்ட பின்னர் நான் கேட்ட கடன் தொகையான ஐந்து இலட்சத்தை எனக்கு வழங்கினர். மிகவும் குறைந்த காலப்பகுதியில் ஒரு சில ஆவணங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டு எனக்கு வழங்கிய கடன் தொடர்பில் உண்மையாகவே நான் மகிழ்ச்சியடைகிறேன். இன்று எனது வேலைத்தளத்தில் ஆறு பேர் தொழில் புரிகின்றனர். வியாபாரத்தை வெற்றிகரமாக நடத்துவதற்கு நான் பெற்றுக் கொண்ட கடன் பாரிய உதவியாக அமைந்தது.

ரீ.எல். பிரியந்த கருணாரத்ன

பிரியந்த அயன் வேர்க்ஸ் என்ட் சேர்விஸ் சென்டர்

கிரிமெட்டியாவ, ஹிதோகம.

## நாளின் இனிமையான எட்டு மணித்தியாலங்கள்

பாகம் 2



# அலுவலகத்தில் சேவகர்கள்

ஒரு ராஜ மாளிகையில் சேவகன் ஒருவன் இருந்தான். அந்த சேவகன் ஒரு நாள் அரசரிடம் ஒரு முறைப்பாட்டைச் செய்தான். அந்த முறைப்பாட்டை அவனது வார்த்தையில் கூறுவதனால், அரசரே, நீங்கள் எனக்கு அநீதி இழைக்கிறீர்கள்... உங்களுக்கு தெரியும் நான் காலையில் இருந்து மாலை வரை வியர்வை சிந்தி நேர்மையாக வேலை செய்கிறேன். எனினும் எனக்கு குறைந்தளவு வேதனமே வழங்கப்படுகிறது. என்றாலும் அமைச்சர் அவர்கள் எதுவும் செய்யாமல் உங்களுடனேயே பொழுதைக் கழித்துக் கொண்டு இருக்கிறார். என்றாலும் என்னை விட அதிக சம்பளம் பெறுகிறார். நான் இங்கு அதிக வேலைகள் செய்கிறேன். எனக்கு தான் அதிக சம்பளம் வழங்க வேண்டுமென்றான். இவ்விதம் சேவகன் அரசரிடம் கூறியதும், இந்த விடயம் தொடர்பில் நான் உன்னிடம் பின்னர் கலந்துரையாடுகிறேன். இப்போது துறைமுகத்துக்கு சென்று எத்தனை கப்பல்கள் வந்துள்ளன என்று பார்த்துவிட்டு வா என்றார்.

துறைமுகத்திலிருந்து திரும்பிய சேவகன் கப்பல்கள் வந்துள்ளன என்றான். அதற்கு மன்னர், எத்தனை கப்பல்கள் வந்துள்ளன என்று கேட்டார்? சேவகன் மீண்டும் துறைமுகத்துக்கு ஓடிச்சென்று ஐந்து கப்பல்கள் வந்துள்ளன மன்னரே... என்று கூறினான். மன்னர் மீண்டும், அந்தக் கப்பல்கள் எந்த நாட்டில் இருந்து வந்துள்ளன என்று கேட்டார்? சேவகன், சற்று பொறுத்திருங்கள் என்று கூறிவிட்டு, மீண்டும் ஓடிச்சென்று பிரான்ஸ், ஜேர்மன், இத்தாலி, சீனா, ரஷ்யா ஆகிய ஐந்து நாடுகளில் இருந்து கப்பல்கள் வந்துள்ளன என்றான். அந்தக் கப்பலில் மனிதர்கள் இருக்கிறார்களா என்றார்? சேவகன் மீண்டும் ஓடிச் சென்று மூன்று கப்பல்களில் மாத்திரம் மனிதர்கள் இருக்கிறார்கள் என்றும், இரண்டு கப்பல்களில் மனிதர்கள் இல்லை என்றும் கூறினான். மன்னர் மீண்டும், அந்தக் கப்பல்கள் எப்போது அந்த நாட்டுக்கு செல்லும் என்று கேட்டார். மீண்டும் ஓடிச் சென்று மூன்று கப்பல்கள் நாளையும் இரண்டு கப்பல்கள் நாளை மறுதினமும் செல்ல உள்ளதாக மன்னரிடம் கூறினான்.

ஐந்து கேள்விகளைக் கேட்ட மன்னர் சேவகனைப் பார்த்து நீ சற்று அந்த இடத்தில் அமரவும் என்று கூறினார். சற்று நேரத்தில் அமைச்சரை சிம்மாசனத்துக்கு அழைத்தார். அமைச்சரிடம் மன்னர் அவர்கள் அமைச்சரே... துறைமுகத்துக்கு கப்பல்கள் வந்துள்ளனவா என்று பார்த்துவிட்டு வருமாறு கூறினார். அவ்வாறே ஆகட்டும் என்று கூறிவிட்டு அமைச்சர் அங்கிருந்து புறப்பட்டார். சற்று நேரத்தில் அமைச்சர் மீண்டும் சிம்மாசனத்துக்கு வருகை தந்து மன்னர் சேவகனிடம் கேட்ட ஐந்து கேள்விகளையும் கேட்டார்.

அமைச்சர் அவர்கள் ஒரே தடவையில் அந்தக் கேள்விகளுக்கு பதிலளித்தார். அதன் பின்னர் சேவகனைப் பார்த்த மன்னர், சேவகனே நான் உன்னிடம் ஐந்து கேள்விகள் கேட்டேன். நீ ஐந்து கேள்விகளுக்கு பதிலளிக்க ஐந்து தடவை துறைமுகத்துக்குச் சென்றாய். ஆனால், அமைச்சர் ஒரு தடவை மாத்திரமே துறைமுகத்துக்குச் சென்று நான் கேட்ட கேள்விகளுக்கு பதிலளித்தார். இதுதான் உனக்கும் அமைச்சருக்கும் இடையிலான பாரிய வித்தியாசம் என்று பதிலளித்தார். இதனால் தான் அமைச்சருக்கு அதிக சம்பளமும், உனக்கு குறைந்த சம்பளமும் கொடுக்கப்படுகிறது என்று கூறினார்.

உற்பத்தி திறன் பற்றி பேசும் எமக்கு சேவகனின் கதை நல்ல உதாரணமாகும். அனேக வேலைத்தளங்களில் இவ்வாறான சேவகர்கள் நிறையவே இருக்கிறார்கள். எனினும் அவர்கள் கஷ்டப்படும் அளவுக்கு அவர்களின் தொழிலில் வினைத்திறன் இல்லை. இதனால் ஒருவர் செய்யும் வேலையை மற்றவர் அவதானிக்க வேண்டியுள்ளது. 10 நிமிட வேலையை நிறைவு செய்ய ஒரு மணித்தியாலம் தேவைப்படுகிறது. அந்த வேலை முடிந்தாலும் அதில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுவதால் ஒருவருக்கு அதனை ஆரம்பத்தில் இருந்து பரிசீலனை செய்ய வேண்டியுள்ளது. இதனால் உற்பத்தி திறன் என்பது வெறும் புஷ்வானமாக மாறுகிறது. நாம் சகல சேவகர்களையும் அமைச்சர்களாக மாற்றுவதற்கு திட்டங்களை வகுக்க வேண்டும். அதனை செய்ய முடியுமா? பதில் ஆம்/இல்லை. ஆம் முடியும். இல்லை, செய்ய முடியாது. ஆகிய இரு விடைகளும் சரி. எனினும் ஏன் செய்ய முடியாது என்பதை பார்ப்போம். ஒவ்வொரு மனிதரும் தனது மூளையின் செயற்பாட்டுக்கு அமையவே செயற்படுகிறார்கள். இதனை உள்ளார்ந்த ரீதியில் மாற்றுவது சற்று கடினம். ஒரே குடும்பத்தில் பிறந்து ஒன்றாக படித்து சகல வரப்பிரசாதங்களையும் அனுபவித்து ஒருவர் படித்து பட்டம் பெற்று உயர் நிலையில் இருக்கும் போது மற்றவர் சாதாரண தரமும் சித்தியடையாமல் போதைப் பொருளுக்கு அடிமையாகின்றான். இது அவர்களின் தனிப்பட்ட முயற்சியினால் கிடைத்த பெறுபேறாகும். சிலர் இதற்கு விதி என்று கூறுகிறார்கள். சிலர் கடவுள் கொடுத்தது என்று கூறுகிறார்கள். செல்வம் கிடைக்கும் முறையில் அது தனிநபர் ஒருவரின் முயற்சியாக இதனை அடையாளப்படுத்த முடியும். இதனால் தான் முடியாது என்ற பதிலை தெரிவித்தோம்.



ஆளுமைப் பயிற்சி நிபுணர்
சட்டத்தரணி, கலாநிதி
குமா இத்தல்கம



பிழை செய்துவிட்டு தர்க்கம் புரிவது மனவலிமை குன்றிய செயலுக்கு ஒப்பானது.





பிரைம் கிராமின் மைக்ரோ பினான்ஸ் கம்பனியின் முகாமைத்துவ பணிப்பாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரி சமிந்த பிரபாத் அவர்களுடனான நேர்காணலை கீழே தருகின்றோம்

# கடன் விண்ணப்பதாரி எவ்விதம் அறிந்து கொள்வது...!

எந்தவொரு நிதி நிறுவனமும் கடனுக்கு விண்ணப்பிக்கும் நபருக்கும் நிதி நிறுவனத்துக்கும் இடையில் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் எவ்வித முன் பரீட்சயம் இல்லாத நிலையே இருக்கும். இதனால் தான் கொடுக்கல் வாங்கல் செய்யும் நபர் மற்றும் அவரது வியாபாரம் தொடர்பில் நிதி நிறுவன கடன் வழங்கும் அதிகாரியினால் (Credit Officer) கடன் வழங்குவதற்கு முன்னர் அவர் தொடர்பான சகல விபரங்களையும் பரிசீலனை செய்ய வேண்டியுள்ளது.

ஏனெனில், அவரின் வியாபாரத்துடன் தொடர்புடைய சகல தரவுகளை ஒன்றுதிரட்ட வேண்டும். இதன் முதற்படியாக குறிப்பிட்ட வியாபார நிலையத்தை சென்று (Site Visit) பார்வையிடுவதுடன் அதன் பின்னர் அந்த நபரின் தகவல்களை பெற்றுக் கொள்ள வேண்டும். தகவல்களை பரிசீலனை செய்யும் போது அந்த நபரின் வியாபாரம் நிலையம் அமைந்துள்ள இடம் தொடர்பிலும் அவரின் இல்லம் மற்றும் அதன் உரிமையாளர் தொடர்பிலும், அந்த நபருடன் தொடர்புடைய விநியோகத்தர்கள், கொடுக்கல் வாங்களில் ஈடுபடும் வாடிக்கையாளர் தொடர்பிலும் அறிந்து கொள்ள வேண்டியது கடன் வழங்கும் அதிகாரியின் கடமையாகும்.

இந்த தகவல்களை சம்பந்தப்பட்ட நபருடன் நேரடியாக தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்வதன் மூலம் கடன் வழங்கும் போது ஏற்படக்கூடிய பிரச்சினைகளை குறைத்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும். இந்த தகவல்களை கடன் பெறுவர் தொடர்பில் சரியான மதிப்பீட்டை அளவீடு செய்யக்கூடியதாகவும் இருக்கும். எனினும் இந்தத் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக காலத்தை (Timing) சரியான முறையில் முகாமைத்துவம் செய்வதற்கு கடன் வழங்கும் அதிகாரி தவறும் பட்சத்தில் கடன் வழங்குவது தாமதமடைவதுடன் காலத்தை முகாமைத்துவம் செய்வது மிகவும் இன்றியமையாதது.

அவ்வாறே, கடன் பெறுபவரின் வியாபார நிலையங்களை பரிசீலனை செய்வதற்காக செல்லும் சந்தர்ப்பங்களில் வியாபாரம் மும்முரமாக நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது செல்லாமல், சாதாரண நிலையில் வியாபாரம் நடைபெறும் சந்தர்ப்பங்களை தெரிவு செய்து அந்த நேரத்தில் பரிசீலனை செய்ய கடன் வழங்கும் அதிகாரி நேரத்தை ஒதுக்கிக் கொள்ள வேண்டும்.
கடன் பெறும் நபரின் வியாபார நிலையம் அமைந்துள்ள இடத்தை பார்வையிடும் போது வியாபாரத்தின் மூலம் பெற்றுக் கொள்ளும் வருமான அளவு, ஊழியர் எண்ணிக்கை, அவர்களுக்கு வழங்கும் வேதனம், கடன் பெறுபவரின் சேமிப்பு பழக்கம் போன்றவற்றிலும் கடன் வழங்கும் அதிகாரி கவனம் செலுத்துவது கட்டாயமாகும்.

எந்தவொரு நிதி நிறுவனமும் கடன் வழங்கும் போது தனது வாடிக்கையாளர் தொடர்பில் அறிந்து கொள்வதற்காக ஒரு முறையை கையாண்டு வருகிறது. அதனை C-5 எண்ணக்கரு என்று கூற முடியும்.

## C-5 எண்ணக்கருவை அறிந்து கொள்வோம்

Character (பண்பு)
வாடிக்கையாளரின் தனிப்பட்ட தகவல்களான குடும்பத் தகவல்கள், நம்பிக்கை, வியாபாரத்தின் தன்மை, சமூக நிலை, சட்டத்தை மதிக்கும் தன்மை மற்றும் கடன் நிர்வாகம் தொடர்பில் கையாளும் முறைகள் போன்ற குணங்கள் இங்கு கேட்கப்படும்.

Capacity (இயலுமை)
வாடிக்கையாளர் கடனை மீண்டும் செலுத்துவதற்கான இயலுமை இல்லாவிட்டால் அவரின் வருமானம் மற்றும் செலவுகள் தொடர்பில் இங்கு பரிசீலனை செய்யப்படும்.

Capital (மூலதனம்)
வாடிக்கையாளரின் வியாபார நிலையம் மற்றும் வீட்டின் பெறுமதி, காசுப் பாய்ச்சல் ஆகியன மதிப்பிடப்படுவதுடன் வாடிக்கையாளரின் வங்கிக் கணக்கு, வியாபாரத்துக்கு ஈடுபடுத்தப்பட்ட சொத்தின் தன்மை மற்றும் தற்போதைய பெறுமதி, வேறு ஏதேனும் துறைகளில் ஈடுபடுத்தியுள்ள முதலீடுகள் போன்றவற்றையும் கடன் வழங்கும் அதிகாரி பரிசீலனை செய்ய வேண்டும்.

Collateral (போட்டியாளர்கள்)
வாடிக்கையாளரின் தொழிலைப் போன்று வேறு நபர்கள் அதே முயற்சியில் ஈடுபடுகிறார்களா, இது தொடர்பில் அவருக்கு ஏற்படக்கூடிய போட்டித்தன்மை, வியாபாரத்துக்கு ஏற்பட்டுள்ள சவால் என்பவற்றை எவ்விதம் அவர் கையாள்கிறார் என்பதை இது குறிக்கின்றது.

Condition (நிலை)

நிதி நிறுவனமொன்றினால் வாடிக்கையாளர் ஒருவருக்கு விதிக்கப்படும் நிபந்தனைகள், சந்தை நிலை குறிப்பாக விலை நிர்ணம் என்பவற்றினால் வாடிக்கையாளர் எதிர்நோக்கும் சவால்களும் அவரின் உடல் நிலையும், வியாபாரத்தின் தன்மையைப் பொறுத்து அதற்காக அவர் கையாளும் பாதுகாப்பு நடைமுறைகளும் உதாரணமாக வியாபார நிலையம் வெள்ளப் பெருக்கு ஏற்படும் போது நிறுவனம் பாதிப்படையுமா, கால்நடை வளர்ப்பவராயின் அந்தக் கால்நடைகளுக்கு இலகுவாக உணவைப் பெற்றுக் கொள்ள முடியுமா போன்ற விடயங்கள் தொடர்பில் அவதானிக்க வேண்டும்.

இவ்விதம் நிதி நிறுவனமொன்றினால் சேகரிக்கப்படும் தரவுகள் உண்மையான தாகவும், சரியானதாகவும் இருக்க வேண்டும். இந்தத் தரவுகளை கடன் வழங்கும் அதிகாரி தமது தேவைக்கேற்றவாறு பெற்றுக் கொள்ள வேண்டும்.

இவ்விதம் பெறப்பட்ட தரவுகளில் எவ்வித சந்தேகமும் இல்லை என்பதை உறுதி செய்து கொள்வதற்காக கடன் வழங்கும் அதிகாரி கடன் பெறவுள்ள நபரை நேர் முகப்பரீட்சை நடத்த முடியும். இதன் போது கடன் வழங்கும் அதிகாரி பின்வரும் விடயங்கள் தொடர்பில் தனது கவனத்தை செலுத்த வேண்டும்.

அது என்ன என்பது தொடர்பில் அடுத்த வார இதழில் ஆராய்வோம்.

# - லீசிங் (குத்தகை) என்றால் என்ன -




நிதித்துறையில் பல்வேறு துறைகளில் சேவைகளை பரப்பி வரும் HNB கிராமின் நிறுவனம் அண்மையில் நிதித்துறையில் புதிய சேவையொன்றை ஆரம்பித்தது. அது நிதிக் குத்தகை சேவையாகும். (Leasing) ஊடாக வாகனம், இயந்திரங்கள் உட்பட வியாபாரத்துடன் தொடர்புடைய பொருட்களை கொள்வனவு செய்வதற்கு தேவையான குத்தகை சேவையை வழங்குவதற்கே HNB கிராமின் எதிர்பார்க்கிறது. இந்தச் சேவையைப் பெறக்கூடிய தகுதிவாய்ந்த எந்தவொரு நபருக்கும் குத்தகை சேவையை வழங்குவதற்கு HNB கிராமின் நிறுவனம் தயாராக இருப்பதுடன் குத்தகை தொடர்பாக உங்களின் அறிவை மேலும் விருத்தி செய்வதற்காகவே இன்று முதல் இந்தக் கட்டுரை வெளிவருகின்றது.

**குத்தகை - Leases**

தவணைக்கட்டண அடிப்படையில் கட்டணங்களை செலுத்தி சொத்துக்கள் அல்லது பொருட்களை வாடகைக்கு எடுப்பது தொடர்பில் சகலரும் அறிந்து வைத்திருப்பீர்கள். இங்கு குறிப்பிட்ட சொத்து ஒரு காலப்பகுதியில் தற்காலிக பாவனைக்காக உரிமையாளரிடம் இருந்து பொருட்களை பெற்றுக் கொள்வதாகும். உரிமையாளரிடம் தெரிவித்த காலப்பகுதி நிறைவடைந்த உடன் பொருளை மீண்டும் ஒப்படைக்க வேண்டும். பொருளை பொறுப்பேற்ற போது இணங்கிய கட்டணத்தை செலுத்த வேண்டும். குத்தகை சேவையும் இதே போன்ற செயற்பாடுதான் என்பதை நாம் உங்களுக்கு தெரிவிக்க விரும்புகிறேன்.

**குத்தகை வகைகள் - (Classification of Leases)**

இவற்றில் இரண்டு வகைகள் உண்டு

1. நிதிக் குத்தகை Finance Leases
   - 1.1 புதிய சொத்துக்களை குத்தகைக்கு எடுத்தல்.
   - 1.2. தம்மிடம் இருக்கும் சொத்துக்களின் உரிமையை குத்தகை நிறுவனத்துக்கு வழங்கி பணம் பெற்றுக் கொள்ளல் Lease Back
2. செயற்பாட்டு குத்தகைகீழ்வரும் விடயங்களை வைத்தே குத்தகையை வகைப்படுத்த முடியும்.

உதாரணம்: நிதிக்குத்தகையின் அடிப்படையில் எமது நிறுவனத்தினால் வாகனமொன்று குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொண்ட பிறகு அந்த வாகனத்தின் என்ஜின் பழுதடைந்தால் குத்தகையாளரினால் அதன் செலவுகள் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும். அந்த வாகனத்தை எமது நிறுவன செயற்பாட்டுக்காக குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொண்டால் அந்த வாகனத்துக்கு பதிலாக பிறிதொரு வாகனத்தை குத்தகையாளருக்கு வழங்க வேண்டும்.

சொத்தின் உரிமை மற்றும் பழுதடையாமல் பாதுகாத்தல், இலாபம் என்பன வாடகைக்கு வழங்கியவரினால் தீர்வை கணக்காளரினால் முன்வைக்கும் மாறுபட்ட தொகைக்கு ஏற்பவே நிதிக் குத்தகை அல்லது செயற்பாட்டு குத்தகை என பிரித்து பார்க்க முடியும்.

இடர் மற்றும் நன்மையை அடைந்துக் கொள்வதற்கு ஏற்ற வகையில் குத்தகை அமைந்தால் அது நிதி குத்தகை எனப்படும்.

இதனடிப்படையில் எமது நிறுவனத்தினால் வழங்கப்படுவது நிதிக் குத்தகை Finance Leasing என்பது எமக்கு தெளிவாகின்றது.

**HNB கிராமின் பைனான்ஸ் லிமிட்டெட் பிரதி பொது முகாமையாளர் (சிறிய மற்றும் மத்திய அளவு கடன் மற்றும் குத்தகை) பத்மசிறி தயாவங்ச அவர்களுடனான நேர்காணலில் இருந்து தயாரிக்கப்பட்டது.**

சந்தகெலும் ஜயதுங்க

**இடர் மற்றும் வருமானம்**

- குத்தகையாளருக்கு உரிமை இல்லாவிட்டால் 'நிதி'க் குத்தகை
- குத்தகையாளருக்கு உரிமை மாற்றினால் 'செயற்பாட்டு' குத்தகையாகும்.

### குத்தகை மாறுபடும் விதம்

- வாடகைக் கால முடிவில் வாடகை கணக்காளரினால் உரிமை மாற்றமடைகிறதா?
  - ஆம் → நிதிக் குத்தகை
  - இல்லை → சொத்தின் உண்மை விலையை விட குறைந்த விலைக்கு பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பம் தீர்வை கணக்காளருக்கு இருக்கிறதா?
    - ஆம் → நிதிக் குத்தகை
    - இல்லை → குத்தகைப் பணத்தின் மிகக்குறைந்த கட்டணத்தின் தற்போதைய மதிப்பு (ஆரம்ப முதலீடு / வட்டி மற்றும் தவணை) மொத்தமாக சொத்தின் அண்ணளவாக மதிப்பு காணப்பட்டால்
      - ஆம் → நிதிக் குத்தகை
      - இல்லை → செயற்பாட்டு குத்தகை

---

**5 தொடர்**

விரும்புகிறேன். இதனால் இன்றும் எவ்வித இன்னல்களுக்கும் முகம் கொடுக்காமல் இருக்க முடிகிறது.

**விருதுகளைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்ற ஆர்வம் உங்களுக்கு இருக்கிறதா?** ஒரு காலத்தில் நான் இராணுவத்தில் இணைந்து கொள்ள ஆர்வமாக இருந்தேன். நான் பாடசாலை கெடட் அணியில் இருந்தேன். அவ்வாறே இராணுவ நேர்முகப் பரீட்சையில் தோற்றி செகன்ட் லெப்டினன்ட் பதவியொன்றும் கிடைத்தது. எனினும் எனது வீட்டாரின் அழுத்தங்களினால் நான் அந்த சந்தர்ப்பத்தை நழுவவிட்டேன். நான் இராணுவத்தில் இணைந்திருந்தால் இன்று பெரிய பதவியொன்றில் இருந்திருப்பேன். எனினும் என்னுள் ஒழுக்கமுள்ள இராணுவ உத்தியோகத்தர் ஒருவர் இருப்பதாக நான் கருதுகின்றேன்.

**உங்கள் வாழ்க்கையில் மிகவும் கவர்ந்த நபர், அவரிடம் காணப்படும் சிறந்த பண்புகள்:** எனது மனைவி, நயனா ரக்ஷிகா அரங்கல. அவளிடம் காணப்படும் உண்மையான நட்பு மற்றும் நம்பிக்கையை நான் மதிக்கின்றேன். அவ்வாறே எனக்கு ஆலோசனைகளை வழங்கி என்னை நாளாந்தம் ஊக்குவிக்கும் மனைவியாக இருப்பது பாரிய சக்தியாகும்.

**முதல் காதல் வாழ்க்கையில் ஏற்படுத்திய மாற்றம்:** பல காதல் தொடர்புகள் இருந்தன. முதலில் நான் பஸ்ஸில் பிரயாணம் செய்யும் போது ஏற்பட்ட காதலை கூறலாம். அப்போது நான் உயர்தரத்தில் கல்வி கற்றுக் கொண்டிருந்தேன். அப்போது ஆண், பெண் என இருபாலாரும் பஸ்ஸில் பிரயாணம் செய்வது வழமையாக இருந்தது. பஸ்ஸில் இருந்த பெண்களில் நீண்ட கூந்தலை உடைய அழகிய தோற்றம் கொண்ட பெண் தொடர்பில் எனக்குள் காதல் மலர்ந்தது. அது நீண்டகாலம் நிலைக்கவில்லை. ஏனெனில் அந்தக் காலத்தில் பெற்றோருக்கு இழுக்கு ஏற்படாத வகையிலேயே எமது காதல் காணப்பட்டது.

**உங்கள் வாழ்க்கை தொடர்பில் திருப்தியடைகிறீர்களா:** நிச்சயமாக. நான் என்றும் தேவையற்ற விடயங்களை எதிர்பார்ப்பவன் அல்ல. வாழ்க்கையில் முடியுமான அளவு எளிமையாக இருப்பதையே விரும்புகிறேன். நான் அனைத்தையும் பெற்றவன், அவ்வாறே அனைத்தையும் அனுபவித்துள்ளேன். நான் சுற்றுப்பயணங்கள் செய்வதை விரும்புகிறேன். குடும்பத்துடன் பொழுதை கழிப்பதற்கு ஆவலாக இருக்கிறேன். மற்றொன்றுடன் ஒப்பிடுவதற்கு முயற்சி செய்ய மாட்டேன். அனைத்தையும் நாம் விட்டுச் செல்பவர்கள் என்ற உணர்வுடன் இருப்ப வன். வாழும் வரை நேர்மையாக அனைத்தையும் பெறுவதால் நான் திருப்தியடைகிறேன்.

**உங்கள் வாழ்க்கையின் திருப்புமுனையாக கருதுவது (terning Point) :** முதல் தொழில் இருந்து விலகி கிராமின் நிறுவனத்தில் இணைந்து கொண்டதை terning Point ஆக கருதுகிறேன். கிராமின் நிறுவனத்தில் சகலதும் கிடைப்பதால் இலகுவாக எமது . . . எனக்கு முடியுமாக இருக்கிறது.

**உங்களுக்கு பிடித்த பாடகர்:** அமரதேவ அவர்கள்

**பாடல்:** ஒரு பாடல் என்று கூற முடியாது. பழைய Classic பாடல்களை விரும்பி கேட்பேன்

**திரைப்படம்:** வீரபுரன் அப்பு

**நாவல்:** மனுதாபய

எமக்கு தெரியாத எதிர்காலத்துக்கு, வீணாக அச்சம் கொள்ளத் தேவையில்லை.

# சித்திரக் கலை நண்பர்கள்

Atlas

சிறுவர்களின் கைவண்ண பகுதி

“சித்திர கலை நண்பர்கள்” வரைதல் பகுதி எச்.என்.பி. கிராமின் உத்தியோகத்தர் களுக்கானது என்பதுடன் உங்கள் பிள்ளைகளின் படைப்புகள், ஆக்கங்களை பிரசுரிக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. “சித்திர கலை நண்பர்கள்” பகுதியில் பிரசுரிக்கப்படும் சிறந்த மூன்று படைப்புகளுக்கு சிலோன் பென்சில் நிறுவனத்தினால் (எட்லஸ்) பெறுமதிமிக்க பரிசுக் குவியல்கள் மூன்று வழங்கப்படுவதுடன் நீங்கள் வரைந்து அனுப்பும் தாளின் பின்பகுதியில் எட்லஸ் அல்லது ஹொம்ரன்பஸ் கலர் பெட்டியின் இலட்சினையை ஒட்டி அனுப்பவும். உங்கள் பிள்ளைகளின் ஆக்கங்களை, படைப்புகளை பிரசுரித்து இதன் அனுகூலங்களை பெற்றுக் கொள்ளுங்கள். உங்கள் பிள்ளைகளின் படைப்புகளை பதிப்பாசிரியர், கைவண்ணப்பகுதி, எச்.என்.பி.கிராமின் கட்டிடம், இல. 168, நாவல வீதி, நுகெகொடை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.



எங்கள் கிராமம்
பீ.கே. நதுன் ஜயசங்க - தரம் 01
(ரொஹான் பெரேரா- நாவலப்பிட்டி)



நத்தார்
சந்துப ஹசரல் ரணவீர - தரம் 02
(கமல் பிரியங்க - தலைமையகம்)



கடலுக்கு செல்லும் மீனவர்கள்
கே.மல்மி காவ்யா - தரம் 02
(கே.ஆர்.தர்மசிறி - புத்தளம்)



வியாபாரி
கவின் ரந்திலு ரணவீர - தரம் 01
(கமல் பிரியங்க - தலைமையகம்)



எனக்கு பிடித்த மிருகம்
எம்.ரி.உதுல் புத்மின தந்ரிகே - தரம் 01
(புத்திக தந்திரிகே - தலைமையகம்)



தவப்பயணம்
எஸ்.எம்.லஹிரு நிர்மால்
தரம் 8
(எஸ்.எம்.மகேஷ் உதய
அம்பலாங்கொடை)



எமது கிராமம்
ஜே.ஏ. மலீஷா ஹிருஷான் -
தரம் 5
(ஜே.ஏ.சமன் ஹேமசிறி
புத்தளம்)



நான் விகாரைக்கு சென்ற நாள்
எஸ்.எம். நிதினி தினேத்மா - வயது 4
(எஸ்.எம்.மகேஷ் உதய - அம்பலாங்கொடை)



நெல் அறுவடை செய்யும் பெண்கள்
தினதி அபேசேகர - தரம் 02
(ரோஹன அபேசேகர - வெலிமடை)

**கடந்த இதழில் “சித்திரக்கலை நண்பர்கள்” சித்திரம் வரைந்து வெற்றிபெற்ற வெற்றியாளர்கள்**

**01.** எஸ்.எம்.லஹிரு நிர்மால் - கம்மடு ஓவியம்

**02.** மினுதி மந்துலி எதிரிசிங்க - எமது குடும்பம்

03. சிதும் ஆலொக பெர்ணாந்து- கிராம தோற்றம்



## மெஹெவர அச்சு வடிவமாக வெளிவந்த போது...

இவ்வளவு காலமும் இணைய வெளியீடாக சிங்கள, தமிழ் மொழியில் வெளிவந்த மெஹெவர செய்தித்தாள் 2015 நவம்பர் மாதம் 20ஆம் திகதி முதல் அச்சு ஊடகமாக வெளியிடப்பட்டது. இந்நிகழ்வு HNB கிராமின் பிரதான மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது. HNB கிராமின் முகாமைத்துவப் பணிப்பாளர் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் சமிந்த பிரபாத் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பணிப்பாளர் திருமதி கிரு'ந்தி தம்பையா அவர்கள் உட்பட நிறுவனத்தின் அனைத்து ஊழியர், அங்கத்தவர்களும் கலந்து கொண்டனர். ஊழியர்களிடையே நல்லெண்ணத்தையும், பரஸ்பர நல்லுறவையும் மேலும் கட்டியெழுப்பும் நோக்கில் மெஹெவர செய்தித்தாள் சகல ஊழியர்களுக்கும் விநியோகிக்கப்படுகிறது. இதன் மூலம் நிறுவன ஊழியர் படையினர் மத்தியில் அறிவு, ஆற்றலை விருத்தி செய்யும் சந்தர்ப்பமாகவும் அமையும் என்பதில் எவ்வித அமைந்துள்ளது.



டெலிகானாகின் How to win Friend & influence people என்ற நாவலின் தமிழ் மொழிபெயர்ப்பு

# நாம் எம்மை எவ்விதம் அடையாளம் காண்பது...

பாகம் 2

சுயவிருத்தி (SELF DEVELOPMENT) தொடர்பாக உலகின் முதலாவது நூலாக கருதப்படுவது டெல்கானாவின் HOW TO WIN FRIENDS & INFLUENCE PEOPLE என்ற நூலாகும். இந்த நூல் 1937ஆம் ஆண்டு வெளியிடப்பட்டதுடன் சுமார் 34 மொழிகளில் அச்சிடப்பட்டுள்ளது. நூல் வெளியிடப்பட்ட நாள் முதல் இன்று வரை சுமார் 78 ஆண்டுகள் கழிந்துள்ள போதிலும் மக்கள் மத்தியில் இன்றும் பிரசித்திபெற்ற நூலாக காணப்படுகின்றது. இந்த நூலின் பிரதிகள் 20,000,000 வரை வெளியிடப்பட்டுள்ளதுடன் உலகின் பல நாடுகளிலும் விற்பனை செய்யப்பட்டுள்ளன. டெல்கானா 1955ஆம் ஆண்டு மரணமானார். அவரினால் படைக்கப்பட்ட இந்த நூல் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்டதுடன் எவ்விதம் மக்கள் சுயமாக விருத்தியடைவது என்பது தொடர்பாக மிகவும் ஆக்கப்பூர்வமான பல விடயங்கள் இந்தப் புத்தகத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

டெல்கானாவின் HOW TO WIN FRIENDS & INFLUENCE PEOPLE என்ற நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு

**மற்றவர்களின் குறைகளை வெளிப்படுத்துவதன் மூலம் குற்றவாளி உருவாக்கப்படுகிறார். இதன் மூலம் குறை கூறப்பட்ட நபரின் பெயருக்கு களங்கம் ஏற்படுகிறது. அவருடைய மனம் துன்பமடைகிறது. அவருடைய நன்மதிப்பு இழக்கப்படுகிறது. இவ்வாறான செயற்பாடுகளின் பெறுபேறு உங்கள் தொடர்பில் ஏற்படும் பிழையான எண்ணமாகும்.**

## நான் எந்தளவு நல்லவன் என்பதை நீங்கள் புரிந்து கொண்டால்

மற்றவர்களின் குறைகளை அடிக்கடி கூறும்போது குற்றவாளி உருவாக்கப்படுகிறார். இதன் மூலம் குறை கூறப்பட்ட நபரின் பெயருக்கு களங்கம் ஏற்படுகிறது. அவருடைய மனம் துன்பமடைகிறது. அவருடைய நன்மதிப்பு இழக்கப்படுகிறது. இவ்வாறான செயற்பாடுகளின் பெறுபேறேகளே நீங்கள் மற்றவர்கள் தொடர்பில் கொண்டுள்ள பிழையான எண்ணமாகும்.
டுகன் குரொலி, அல்கபோன் போன்று அமெரிக்காவின் பெயர்பெற்ற குற்றவாளியாக டச் சுல்டிஸை குறிப்பிட முடியும். நெவார்க் என்ற பிரதேசத்தில் ஒரு கும்பலின் துப்பாக்கிச் சூட்டில் அவன் பலியானான். தான் மக்கள் மத்தியில் பிரபல்யம் வாய்ந்த நபரென்று டச் சுல்டிஸை கருதியிருக்கலாம். அமெரிக்காவின் ஒரு பத்திரிகையில் அவன் வழங்கிய நேர்காணலில் தான் மக்களுக்கு உதவி உபகாரங்களை செய்வதும், மக்களுடனேயே வாழ்ந்து வருவதாகவும் பல இடங்களில் அழுத்தமாக தெரிவித்திருந்தான். அவ்விதமே அவன் வாழ்ந்திருக்கலாம்.
பாரிய குற்றச் செயல்களை செய்யும் நபர்கள் பொதுமக்களை மையப்படுத்திய எண்ணங்கள் எமக்கும் பிரச்சினைக்குரிய விடயமாக நோக்க வேண்டியுள்ளது. இது தொடர்பாக சின்க் சின்க் சிறைச்சாலையில் பல வருடங்களாக சேவையாற்றிய லெவிஸ் லாவோஸிடம் நான் வினவினேன்.
“சின்க் சின்க் சிறைச்சாலைக்கு வருகை தரும் குற்றவாளிகளில் ஒரு சிலரே தான் குற்றம் செய்த பாவியென நினைக்கின்றனர். ஏனைய அனைவரும் எங்களைப் போன்ற சாதாரண மனிதராகவே கருதுகின்றனர். எனினும் தான் குற்றமற்றவன் என்பதை நிரூபிக்கும் காரணங்களை தேடுகின்றனர். பல விடயங்கள் விபரிக்கப்படுகின்றன. களவெடுக்க காரணமாக அமைந்தது எது? மனிதனை ஏன் கொல்வதற்கு முயற்சி செய்யப்பட்டது? போன்ற விடயங்களை குற்றவாளிகளிடம் கேட்டால் அதனை நியாயப்படுத்தும் வகையிலேயே பதிலளிக்க முயற்சி செய்வர். உண்மையாகவே தான் செய்த குற்றத்தை மறைத்து அதனை நியாயப்படுத்த முயற்சிக்கும் குற்றவாளிகள் அதற்காக முன்வைக்கும் ஆதாரங்கள் ஏற்றுக் கொள்ள முடியுமாக இருந்தால் அவர்கள் சிறைச்சாலைக்கு வருகை தர வேண்டியதில்லை”. பெயர்பெற்ற குற்ற வாளிகள் தான் செய்த குற்றத்தை ஏற்பதற்கு தயக்கம் காட்டும் போது எமது சமூகத்தில் நாளாந்தம் சிறிய சிறிய குற்றங்களை செய்யும் நபர்கள் தான் செய்த குற்றத்தை மறைக்க முயற்சி செய்ய மாட்டார்கள் என்று எவ்விதம் கருத முடியும்? இவை மற்றவர்களினால் செய்யப்படும் பிழைகளை சுட்டிக்காட்டுவதற்கு நாம் கடைப்பிடிக்கும் தந்திரோபாயம் என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.
ஜோன் வொனாமேகர் கடைத்தொகுதிகளின் உரிமையாளராகும். மற்றவர்களின் குறைகளை அவதானிப்பவர் தொடர்பில் அவர் இவ்வாறு கூறியுள்ளார். மற்றவர்களை தூற்றுவது பிழையானது என்பதை நான் சுமார் முப்பது வருடங்களுக்கு முன்பு அறிந்து கொண்டேன். மக்களின் குறைகளை எடுத்துக் கூறுவதற்காக முன்வந்த போது அதனால் நான் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியேற்பட்டது. சுருக்கமாக, புத்தியுள்ள பண்பாக இறைவன் கூட அதனை ஏற்றுக் கொள்ள மாட்டான். மற்றவர்களின் பிழைகளை கூறுவது, அதற்காக விவாதிப்பது மற்றும் தூற்றுவது விவேகமற்ற செயல் என்று ஜோன் வொனாமேகர் பல காலங்களுக்கு பின்னர் தெரிந்து கொண்டார். எமது சமூகத்தில் வாழும் மக்களில் பலர் பாரிய குற்றங்கள் செய்தாலும் அதனை பெரிதாக காட்டிக் கொள்ள மாட்டார்கள். அவ்வாறே மற்றவர்கள் இது தொடர்பில் பேசுவதற்கும் விருப்பம் கொள்ள மாட்டார்கள். இதுவே உலக நடைமுறையாக இருக்கிறது. எனினும் மற்றவர்களின் குறைகளை கூறுவது சாதாரண விடயமாகும். இதன் மூலம் குற்றவாளியை தப்பிக்க செய்வதற்காக எடுக்கும் உபாயமாகும். நாம் ஒருவரின் குற்றத்தை கருத்துரைக்கும் போது அவனை நல்லவனாக மாற்ற அந்தக் குற்றத்தை எம் முன்னிலையில் எடுத்துக் கூறுவதாகும். இதன் மூலம் எமக்கு என்ன நிகழப் போகிறது? குற்றத்தை முன்வைத்த நானும் நீங்களும் தான் இருக்கிறீர்கள். மற்றவர்களின் குறைகளை பேசுவதன் ஊடாக இன்னுமொரு நபர் குற்றம் செய்ய தூண்டப்படுகிறார். குற்றம் சுமத்தப்பட்ட நபரின் பெயருக்கும் களங்கம் ஏற்படுகிறது. அவருடைய மனம் துன்ப மடைகிறது. அவருடைய நன்மதிப்பு இழக்கப்படுகிறது. இதன் பெறுபேறுதான் அவனுடைய உள் மனதில் உங்கள் தொடர்பில் ஏற்படும் பிழையான எண்ணமாகும். இதுவே மற்றவர்களின் குறைகளை வெளிப்படுத்துவதில் உள்ள ஆபத்து என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

மொழிபெயர்ப்பு
வாசனா லியனாராச்சி

மனநோய் அதிகரிப்புக்கு தவறை நினைத்து வருந்துவதலாகும்.



# கிராமின் சக்தி

## அவரின் வளர்ச்சி

## "சில நிதி நிறுவனங்களில் கடனுக்கு விண்ணப்பிக்கும் போது எங்களை இல்லாதவர்கள் போல் சந்தேகக் கண்கொண்டு அவதானிப்பதை காண முடிகிறது...

### தம்மிகா குணவர்தன - அங்கத்தவர் HNB கிராமின் அநுராதபுர கிளை

அநுராதபுரம் நகரத்துக்கு சற்று அப்பால் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஜவுளிக்கடை அனைவரினதும் கண்களைக் கவரும் வகையில் தைக்கப்பட்ட அழகான ஆடைகளுடன் தோற்றமளித்தது. "டுமாரோ பெஷன் அன்ட் இலக்ரோனிக்ஸ்" காட்சியறையானது நகரில் மத்தியில் அமையாமல் சற்று தூரத்தில் காணப்பட்டாலும் பெண்களுக்கான அழகிய ஆடைகள் உட்பட சிறுவர்களின் ஆடைகளினால் அலங்கரிக்கப்பட்டுள்ள இந்த காட்சியறைக்கு உள்நுழையும் போது எங்களை பரிவுடன் வரவேற்றார் தம்மிக்கா.

அநுராதபுரம், வன்னியகுளம் கிராமத்தில் பிறந்த தம்மிகா குணவர்தன அவர்கள் சகோதர, சகோதரிகள் ஐவர் கொண்ட குடும்பத்தின் இறுதி பிள்ளையாகும். அநுராதபுரம் சுவர்ணபாலி மகளிர் கல்லூரியில் சாதாரண தரம் வரை கல்வி கற்ற தம்மிக்கா அதன் பின்னர் தனது தனிப்பட்ட வாழ்க்கையை ஆரம்பிக்க தீர்மானித்த காரணத்தினால் கல்வியை இடைநிறுத்த வேண்டியேற்பட்டது.



நான் அன்றைய காலப்பகுதியில் சற்று குறும்பு. அவ்வாறே பொடுபோக்கு தன்மையும் இருந்தது. நான் சாதாரண தரம் கல்வி கற்ற பின்னர் எனது அக்காவின் வீட்டில் சில காலம் தங்கியிருந்தேன். அங்கிருந்து ஜுகி மெசின் தையல் வகுப்புக்குச் சென்றேன். அங்கு படித்ததை அனுபவமாகக் கொண்டு எனது சுய விருப்பின் பேரில் DM ஆடைத்தொழிற்சாலையில் ஜுகி மெசின் ஒப்பரேட்டராக இணைந்து கொண்டேன். அங்கு 1988இல் இருந்து 1997வரை தொழில் புரிந்தேன். எனக்கு 2000ரூபா சம்பளம் கிடைத்தது. இரவு வரை வேலை செய்தால் மேலதிக நேர கொடுப்பனவு வழங்கப்படும். சில காலம் வேலை செய்த சம்பளத்தில் ஒரு தொகையை சேமித்து வந்தேன். சொந்த தொழில் முயற்சியை ஆரம்பிக்க வேண்டுமென்ற எண்ணம் என்னில் பல காலமாக இருந்து வந்தது.

எனது தாயாருக்கு சொந்தமான காணியில் நான் சேமித்து வைத்த பணத்தில் இருந்து சிறிதாக ஒரு கடையை கட்டினேன். அதனை நிர்மாணிக்க போதுமானதாக பணம் இருக்கவில்லை. எனது தாயார் எனக்கு உதவி செய்தார். அங்கு புடவைகள் விற்பனை செய்ய ஆரம்பித்தேன். மகரகமையில் இருந்து புடவைகள் கொண்டு வரப்பட்டன. இவ்விதம் கடையை நடத்திக் கொண்டிருந்த போது எனக்கு அடிக்கடி பணத் தேவை ஏற்பட்டது. விசேடமாக புடவைகள் கொள்வனவு செய்வதற்கு. அவ்வாறே மூலப்பொருட்களை கொள்வனவு செய்யவும் பணம் தேவைப்பட்டது. இதன் பின்னர் 2003ஆம் ஆண்டு கிராமின் நிறுவனத்தில் இணைந்து கொண்டேன்.

அன்றிலிருந்து சுமார் 15 வருடகாலமாக எனது வியாபார முன்னேற்றத்துக்கு கிராமின் நிறுவனம் பங்காளராக இருந்து வருவதுடன் கிராமின் நிறுவனத்தில் பல தடவைகள் கடனுக்கு பணமும் எடுத்துள்ளேன். இந்தக் காலப்பகுதியில் கிராமின் நிறுவனத்தில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

எமது வாழ்க்கையில் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. எனினும் அன்று செயற்பட்டதைப் போன்றே இன்றும் மாற்றமின்றி ஒரே ஒருவிடயம் இருக்கின்றது. அதுதான் நம்பிக்கையும், ஆதரவும்.

நாம் ஆரம்பத்தில் நிர்மாணித்த சிறிய கடைப்பகுதிக்கு பின்னர் புதிதாக பெரியதொரு காட்சியறையை நிர்மாணித்தேன். அதனை நிர்மாணிக்க நான் அடிக்கடி கிராமின் நிறுவனத்தில் கடன் பெற்றேன். நிறுவனத்துக்கு தேவையான உடைகளையும், ஏனைய பொருட்களையும் வாங்குவதற்காக 150,000ரூபாவை அண்மையில் பெற்றேன்.

HNB கிராமின் நிறுவன உத்தியோகத்தர்கள் எம்மை எப்போதும் மனமுவந்து "அம்மா" என்றே அழைப்பார்கள். மிஸ் என்றோ அல்லது பெயர் கூறியோ கூப்பிடுவதை விட அவ்விதம் கூறும் போது எங்கள் உள்ளங்கள் பூரிப்படைவதுடன், சில நிறுவனங்களில் கடன் பெறச் செல்லும் போது அவர்கள் எம்மை நோக்குவது ஏதோ நாங்கள் ஒன்றும் இல்லாத ஏழைகளைப் போலாகும். எமக்கு கௌரவம் முக்கியமாகும். எம்மீது விசுவாசம் கொண்டு கடனை திருப்பிச் செலுத்துவார்கள் என்ற நம்பிக்கையுடன் கடன் வழங்கினால் நாங்கள் ஒருபோதும் நம்பிக்கைத் துரோகம் செய்யமாட்டோம். இலங்கையில் பல நிதிநிறுவனங்கள் காணப்பட்டாலும் நாங்கள் அன்றிலிருந்து இன்று வரை HNB கிராமின் நிறுவனத்தையே நாடுகின்றோம்.

தம்மிக்க மிகவும் நம்பிக்கையுடனும் ஆடம்பரமாகவும் இவ்விதம் கூறினார். அவருடைய முதலாவது கடை மிகவும் அழகாக ஆப்பம் விற்பனை செய்யும் கடையை போன்று பிரபல்யமடைந்துள்ளது.

எமது நிலையத்தில் புதிய ஆடைகள் காணப்படுவதுடன் தற்போது எமது வீட்டில் தையல் மெஷின் உட்பட மூன்று ஊழியர்கள் மேலதிகமாக சேவையில் ஈடுபடுகிறார்கள். இவருடைய வளர்ச்சியின் பின்னால் அவருடைய தனிப்பட்ட முயற்சி – உழைப்பு – வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்கு எவருடைய முன் மாதிரியுமின்றி முன்னேற்றம் அடைபவர்களை எமது நாட்டின் வளம் என்றல்லவா கூற வேண்டும் . . .?

ஆக்கம்
மஞ்சுள ஹெட்டியாராச்சி
படம்: லக்ஷ்மன் குமாரதுங்க



# HNB கிராமின் தாய்நாட்டு சிறுவர்களின் பாதுகாப்புக்கான உன்னத பணியில்

HNB கிராமின் பைனான்ஸ் லிமிட்டெட் முகாமைத்துவப் பணிப்பாளர் / பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் சமிந்த பிரபாத் அவர்கள் உட்பட நிறுவன ஊழியர்களின் ஒன்றுகூடல் நிகழ்வில் கலந்து கொண்ட போது)

எமது நாட்டின் சிறுவர்கள் எதிர்நோக்கும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் சமூகங்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் "பாதுகாப்புமிக்க சிறுவர்களின் எதிர்காலத்துக்காக" என்ற தொனிப்பொருளில் HNB கிராமின் பைனான்ஸ் லிமிட்டெடினால் கடந்த டிசம்பர் மாதம் 10ம் திகதி இரண்டு விழிப்புணர்வு மாநாடுகள் நிகவரெட்டி புத்தி சமுத்ரா ஹோட்டல் கேட்போர் கூடத்திலும் சிலாபம் நகரசபை மண்டபத்திலும் நடைபெற்றன. இதன் மூன்றாவது விழிப்புணர்வு கருத்தரங்கு ஜனவரி 8ஆம் திகதி மொனராகலை செலான்றிச் ஹோட்டலில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. இந்த வேலைத்திட்டத்தின் முதல் கட்டமாக இலங்கை சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் ஆலோசனைக்கு அமைய சிறுவர் துஷ்பிரயோகங்களை எவ்விதம் கட்டுப்படுத்துவது என்பது தொடர்பிலான துண்டுப்பிரசுரம் நாடளாவிய ரீதியில் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன் இதன் இரண்டாம் கட்டமாக விழிப்புணர்வு மாநாடு நடைபெற்றது.

நாட்டின் பொருளாதார மற்றும் சமூக முன்னேற்ற செயற்பாடுகளுக்காக தொடர்ந்தும் பங்களிப்பை வழங்கி வரும் HNB கிராமின் நிறுவனம், தனது சமூகப் பொறுப்பை உணர்ந்து சமூக முன்னேற்றத்திற்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு நிறுவனமாகும். "பாதுகாப்புமிக்க சிறுவர்களின் எதிர்காலத்துக்காக" என்ற தொனிப்பொருளில் நாட்டின் சகல பாகங்களையும் தொடர்புபடுத்தும் வகையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த விழிப்புணர்வு வேலைத்திட்டத்தின் முதல் படியாகும். இலங்கை பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்தின் மக்கள் தொடர்பு பிரிவின் பொறுப்பதிகாரி, சிரேஷ்ட பேச்சாளர் மனோஜ் சமரசேகர அவர்களினால் நடத்தப்பட்ட இந்த மாநாட்டின் அடுத்த நிகழ்வு மொனராகலை மற்றும் யாழ்ப்பாணம் நகரங்களை மையப்படுத்தியதாக நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# HNB கிராமின் ஊழியர்களுக்கு தலைமைத்துவ பயிற்சி . . .









HNB கிராமின் நிறுவன ஊழியர்களின் தலைமைத்துவப் பண்பு, ஆளுமையை விருத்தி செய்யும் வகையில் நடத்தப்பட்ட Leadership certified Practitioner Program மூன்று நாள் பயிற்சி வேலைத்திட்டங்கள் இரண்டு கடந்த நவம்பர் மாதம் 21,22,23ஆம் திகதிகளிலும் 28,29,30 ஆகிய நாட்களில் HNB கிராமின் நிறுவ மேல்நிலை முகாமையாளர்கள் மற்றும் தலைமைக் காரியாலய முகாமையாளர்களுக்காக பாணந்துறை நெவ்ரோ பீச் ஹோட்டலில் நடைபெற்றன. ஆளுமை விருத்தி நிபுணத்துவர் சட்டத்தரணி, கலாநிதி குமா இத்தல்கம அவர்களினால் இந்த வேலைத்திட்டம் நடத்தப்பட்டது. எதிர்வரும் காலங்களில் HNB கிராமின் நிறுவன கீழ்நிலை முகாமையாளர்களுக்கு நடத்துவதற்கு எதிர்பார்ப்பதாக HNB கிராமின் நிறுவன பயிற்சிப் பிரிவின் தலைவர் அநுர உடவத்த அவர்கள் "மெஹெவரவுக்கு" தெரிவித்தார்.

HNB GRAMEEN மெஹெவர
எச்.என்.பி.கிராமின் பைனான்ஸ் லிமிட்டெட்
இல. 168, நாவல வீதி, நுகேகொடை
டெலி : 0112176262 பெக்ஸ் : 0112825843
ஈமெயில் :- manjula.p@hnbgrameen.lk
வெப் :- www.hnbgrameen.com
மேற்பார்வை :- சமிந்த பிரபாத் (முகாமைத்துவ பணிப்பாளர்/பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர்)
பிரதம ஆசிரியர்: மஞ்சுள பிரபாத் ஹெட்டியாராச்சி
பக்க வடிவமைப்பு: சிந்தக (அர்ஜுன கிரபிக்ஸ்)
படப்பிடிப்பு: லக்ஷ்மன் குமாரதுங்க

## Happy Birthday

ஜனவரி, பெப்ரவரி மாதத்தில் பிறந்த தினத்தை கொண்டாடும் எச்.என்.பி.கிராமின் சகோதர உத்தியோகத்தர்களுக்கு எமது இதயபூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம் !

| பெயர் | திகதி | கிளை |
|---|---|---|
| திரு. திலிப் துஷார | ஜனவரி 25 | நுவரெலிய |
| திரு. மகேஷ் பெரேரா | ஜனவரி 25 | பண்டாரகம |
| திரு. சுபுன் ஜயஷான் | ஜனவரி 25 | கடுவளை |
| திரு. பீ. துஸாந்தன் | ஜனவரி 25 | நெடுங்கேணி |
| திரு. துமிந்த டய்டஸ் | ஜனவரி 26 | சிலாபம் |
| திரு. மஞ்சுள ஹெட்டியாராச்சி | ஜனவரி 27 | மாத்தளை |
| திரு. சீதக ஜயசிங்க | ஜனவரி 27 | வத்தளை |
| திரு. திலிப் சந்தன | ஜனவரி 27 | ஹம்பாந்தோட்டை |
| திரு. லக்மால் பீட்டர்சன் | ஜனவரி 27 | பதவிய |
| திரு. பிரபாஸ் இந்திக லால் | ஜனவரி 28 | கம்பஹா |
| திரு. மஹில் முனசிங்க | ஜனவரி 28 | குருநாகலை |
| திரு. சானக்க சந்தருவன் | ஜனவரி 28 | சிலாபம் |
| திரு. ஜயலத் பெர்ணாந்து | ஜனவரி 28 | மொரட்டுவை |
| திரு. சித்தும் சந்தருவன் | ஜனவரி 28 | வத்தளை |
| திரு. லக்ஷான் தயாவங்ஸ | ஜனவரி 29 | தலைமையகம் |
| திரு. அரவிந்த சந்தருவன் | ஜனவரி 29 | களுத்துறை |
| திரு. ஜனக சந்திரகுமார | ஜனவரி 29 | சிலாபம் |
| திரு. சரத் கவீஷ | ஜனவரி 29 | தலைமையகம் |
| திரு. நெரஞ்சன் ஒவ்லிகல | ஜனவரி 29 | கேகாலை |
| திரு. நுவன் சம்பத் | ஜனவரி 29 | தம்புள்ளை |
| திரு. இசுரு பிரசாத் | ஜனவரி 30 | மத்துகம |
| திரு. விஸ்வநாதன் சுகிர்தநாத் | ஜனவரி 30 | கல்முனை |
| திருமதி. மரீனா சிஜானி | ஜனவரி 30 | பண்டாரகம |
| திரு. மதுசங்க மெண்டிஸ் | ஜனவரி 30 | வத்தளை |
| திருமதி. உதாரி தர்மவர்தன | ஜனவரி 31 | தலைமையகம் |
| திரு. ரனுக கஜநாயக்க | பெப்ரவரி 01 | மொனராகலை |
| திரு. எஸ். நிரஞ்சன் | பெப்ரவரி 01 | வவுனியா |
| திரு. ஸ்ரீ நாத் உதயகுமார | பெப்ரவரி 01 | அம்பாறை |
| திரு. நிர்மால் வீரசிங்க | பெப்ரவரி 01 | குளியாபிட்டிய |
| திரு. அசன்க விமலசூரிய | பெப்ரவரி 02 | தலைமையகம் |
| திரு. ஜோன்மேரி பிரதாபன் | பெப்ரவரி 02 | யாழ்ப்பாணம் |
| திரு. தாரக கலன்சூரிய | பெப்ரவரி 02 | ஜாஎல |
| திரு. ஹசருள் பெர்ணாந்து | பெப்ரவரி 02 | ஹோமாகம |
| திரு. அநுரலால் விஜேவர்தன | பெப்ரவரி 02 | நாவலப்பிட்டி |
| திரு. வஜிர பிரதீப் | பெப்ரவரி 03 | தலைமையகம் |
| திரு. அனுர உடவத்த | பெப்ரவரி 03 | தலைமையகம் |
| திரு. அனஸ்லி பெர்ணாந்து | பெப்ரவரி 04 | தலைமையகம் |
| திரு. ரொஹான் பெரேரா | பெப்ரவரி 04 | வத்தளை |
| திரு. விமுக்தி சந்தகெலும் | பெப்ரவரி 04 | கம்பஹா |
| திரு. ரவீந்திர பண்டார | பெப்ரவரி 04 | நாவலப்பிட்டி |
| திரு. அஜித் குமார | பெப்ரவரி 04 | நெடுங்கேணி |
| திரு. பீ. அல்ராஜ் | பெப்ரவரி 04 | முல்லைத்தீவு |
| திரு. இந்திக சுனிமல் | பெப்ரவரி 05 | மொனராகலை |
| திரு. நாமல் புஷ்பகுமார | பெப்ரவரி 05 | மொரட்டுவை |
| திரு. சஞ்சீவ பிரியதர்ஷன | பெப்ரவரி 05 | நுரைச்சோலை |
| திரு. அமித் கவிசிங்க | பெப்ரவரி 05 | இரத்தினபுரி |
| திரு. சஞ்சீவ நிஷாந்த | பெப்ரவரி 06 | நிட்டம்புவ |
| திருமதி. மகேசி உதயகுமாரி | பெப்ரவரி 06 | கந்தளாய் |
| திரு. தினேஷ் பத்மலால் | பெப்ரவரி 06 | தலைமையகம் |
| திரு. பியும் சாமர | பெப்ரவரி 07 | நுவரெலியா |
| திரு. துஷ்மந்த குமார | பெப்ரவரி 07 | கண்டி |
| திரு. பீ. உதயகுமார | பெப்ரவரி 08 | தலைமையகம் |
| திரு. ஜீவன் வீரவர்தன | பெப்ரவரி 08 | பலாங்கொடை |
| திரு. சானக்க மதுசங்க | பெப்ரவரி 08 | கம்பஹா |
| திரு. கே. பிரபாத் | பெப்ரவரி 08 | முல்லைத்தீவு |
| திரு. உதயங்க சந்திரசிறி | பெப்ரவரி 08 | பிட்டிகல |
| திரு. பந்துல பத்மகுமார | பெப்ரவரி 09 | குருநாகலை |
| திரு. சானக்க குமார | பெப்ரவரி 10 | கண்டி |
| திரு. எம். அனுஷான் | பெப்ரவரி 10 | வவுனியா |
| திரு. சஜித் ஜயமான்ன | பெப்ரவரி 11 | மாத்தறை |
| திரு. கந்தசாமி பிரபாகரன் | பெப்ரவரி 12 | வலப்பனை |
| திரு. அசங்க குமார | பெப்ரவரி 12 | மொரவக்க |
| திரு. பீ.உமாகாந்த் | பெப்ரவரி 12 | கல்முனை |
| திரு. எஸ். ரமேஸ் | பெப்ரவரி 13 | வவுனியா |
| திரு. ஹர்ஷ சரித் | பெப்ரவரி 14 | பண்டாரவளை |
| திரு. திலுக சஞ்சீவ | பெப்ரவரி 14 | வெலிமடை |
| திரு. நிஷான் மதுசங்க | பெப்ரவரி 14 | பெலியத்தை |
| திரு. தாரக ஜயநாத் | பெப்ரவரி 14 | மத்துகம |
| திரு. மஞ்சுள முனசிங்க | பெப்ரவரி 15 | தலைமையகம் |
| திரு. சுசந்த குமார | பெப்ரவரி 15 | நொச்சியாகம |
| திரு. பிரதீப் டயஸ் | பெப்ரவரி 15 | தலைமையகம் |
| திரு. செல்வராஜ் சத்தியராஜ் | பெப்ரவரி 16 | வவுனியா |
| திரு. ஹேசான் சஞ்சீவ | பெப்ரவரி 16 | மாத்தளை |
| திரு. சுதீர சம்பத் | பெப்ரவரி 16 | காலி |
| திருமதி. லக்ராணி ஹேவாகே | பெப்ரவரி 16 | தலைமையகம் |
| திரு. நதுன் பண்டார | பெப்ரவரி 16 | கண்டி |
| திரு. லலித் பண்டார | பெப்ரவரி 17 | பதுளை |
| திரு. மோக்ஷன த சில்வா | பெப்ரவரி 17 | மஹியங்கனை |
| திரு. திவங்க ராமநாயக்க | பெப்ரவரி 17 | குருநாகலை |
| திரு. மனோகரன் சிவகுமார் | பெப்ரவரி 17 | யாழ்ப்பாணம் |
| திரு. திமுத் சஞ்சீவ | பெப்ரவரி 17 | சிலாபம் |
| திரு. சுமித் சந்தன | பெப்ரவரி 18 | மொரட்டுவை |
| திரு. சவன் ரங்கிக | பெப்ரவரி 18 | ஹொரனை |
| திரு. தனஞ்சய பீரிஸ் | பெப்ரவரி 19 | களுத்துறை |
| திரு. ஜானக பிரதீப் | பெப்ரவரி 19 | அநுராதபுரம் |
| திரு. அமில பிரசாத் | பெப்ரவரி 20 | பொலன்னறுவை |
| திரு. ரி. விவேகானந்தன் | பெப்ரவரி 20 | கிளிநொச்சி |
| திரு. ஜகத் ரொஹான் | பெப்ரவரி 21 | ஜாஎல |
| திரு. ஜனக பிரியதர்ஷன | பெப்ரவரி 21 | குருநாகலை |
| திரு. தமித் பிரசங்க | பெப்ரவரி 21 | மதவாச்சி |
| திரு. சம்பிக தரங்க | பெப்ரவரி 21 | நிட்டம்புவ |
| திரு. பேரின்பராசா தினேஸ் | பெப்ரவரி 21 | மட்டக்களப்பு |
| திரு. அஷான் இந்திக | பெப்ரவரி 21 | மொரட்டுவை |
| திரு. ருமேஸ் எந்தனி | பெப்ரவரி 22 | தலைமையகம் |
| திரு. நளின் அசங்க | பெப்ரவரி 22 | நாவலப்பிட்டி |
| திரு. திலின தசநாயக்க | பெப்ரவரி 22 | தலைமையகம் |
| திரு. ருவன் பத்திரன | பெப்ரவரி 22 | பெலியத்தை |
| திரு. சமன்பால மனதுங்க | பெப்ரவரி 22 | வெலிமடை |
| திருமதி. லலின்ரா லக்மாலி | பெப்ரவரி 22 | ஜாஎல |
| திரு. நிபுன் மதுரங்க | பெப்ரவரி 22 | நகரக்கிளை |
| திரு. சமிர மதுசங்க | பெப்ரவரி 23 | வெலிமடை |
| திரு. ரந்திக மிதுரங்க | பெப்ரவரி 23 | ஹோமாகம |
| திரு. வசந்த வெலிகெட்டிய | பெப்ரவரி 24 | கண்டி |
| திரு. உஜித் துஷ்மந்த | பெப்ரவரி 24 | சிலாபம் |
| திரு. மதுசங்க ராமநாயக்க | பெப்ரவரி 24 | பெலியத்தை |
| திரு. சுஷ்யந்தன் | பெப்ரவரி 24 | நெல்லியடி |
| திரு. திலிப் சந்தருவன் | பெப்ரவரி 24 | வத்தளை |
| திரு. கிறிசாந்தன் இந்திக | பெப்ரவரி 25 | குருநாகலை |
| திரு. திலின விராஜ் லங்கா | பெப்ரவரி 25 | மதவாச்சி |
| திரு. தினேஷ் தனஞ்சய | பெப்ரவரி 25 | சிலாபம் |
| திரு. அருண பிரசாத் | பெப்ரவரி 25 | மொனராகலை |
| திரு. சுனிமல் பிரதீப் | பெப்ரவரி 25 | தம்புள்ளை |
| திரு. நிமல் சஞ்சய | பெப்ரவரி 26 | பெலியத்தை |
| திரு. கசுன் புஷ்பகுமார | பெப்ரவரி 26 | வத்தளை |
| திரு. சுரங்க பண்டார | பெப்ரவரி 26 | நாவலப்பிட்டி |
| திரு. ஏ. திலீபதாஸ் | பெப்ரவரி 26 | அம்பாறை |
| திருமதி மேனகா ரணவீர | பெப்ரவரி 26 | தலைமையகம் |
| திரு. மதுசங்க சந்திரசிறி | பெப்ரவரி 26 | அவிசாவளை |
| திரு. சுமித் பண்டார | பெப்ரவரி 27 | மொனராகலை |
| திரு. குயின்டஸ் நிக்சன் | பெப்ரவரி 27 | நுரைச்சோலை |
| திரு. உபுல் பிரியதர்ஷன | பெப்ரவரி 27 | தலைமையகம் |
| திரு. சமன் தென்னக்கோன் | பெப்ரவரி 27 | நுவரெலிய |
| திரு. சுரங்க ரத்னாயக்க | பெப்ரவரி 27 | ரிஹிலகஸ்கொட |
| திரு. எஸ். தர்மராஸா | பெப்ரவரி 27 | மல்லாவி |
| திருமதி. தினேஷிகா மல்ஷானி | பெப்ரவரி 27 | எம்பிலிபிட்டி |
| திரு. லகி சத்துரங்க | பெப்ரவரி 28 | அம்பாறை |
| திரு. இஷான் சத்துரங்க | பெப்ரவரி 28 | குருநாகலை |